விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 154 வள்ளுவர் ஆண்டு 2056 வைகாசி 08 வியாழக்கிழமை (22.05.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/=

# வடக்குக் காணிகள் சுவீகரிக்கப்படமாட்டாது

## அமைச்சர் பிமல் ரத்நாயக்க



(கொழும்பு)

வடக்கு மக்களின் காணிகள் சுவீகரிக்கப்படமாட்டாது. அவ்வாறான ஒரு தேவை அரசாங்கத்துக்குக் கிடையாது என அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (16ஆம் பக்கம் பார்க்க)

## தெல்லிப்பழையில் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழையில் குடும்பஸ்தர் ஒருவர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதில் தெல்லிப்பழை மாவை கலட்டி கொல்லன் 02ஆம் பக்கம் பார்க்க

## போராட்டத்தை கைவிட்ட தனியார் பேருந்து உரிமையாளர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் 769 02ஆம் பக்கம் பார்க்க

## இனப் படுகொலை நினைவுத் தூபி

### காலப் பெறுமதி மிக்க செயல்

### கனேடியத் தூதுவரிடம் சிறீதரன் எம்.பி நேரில் தெரிவிப்பு



(கொழும்பு)

கனடாவின் பிரம்டன் நகரில் இனப்படுகொலை நினைவுத்தூபி அமைக்கப்பட்டமை காலப்பெறுமதி மிக்க செயல் என்றும், அதற்கு ஈழத்தமிழர்கள் சார்பில் கனேடிய அரசுக்கு நன்றி தெரி 15ஆம் பக்கம் பார்க்க

## அசைவ உணவகத்தை மூடுக

### மாநகர சபை ஆணையாளரிடம் மகஜர் கையளிப்பு



15ஆம் பக்கம் பார்க்க

## முல்லைத்தீவில் விபத்து; 8 வயது மாணவி உயிரிழப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கொக்கிளாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கருநாட்டுக்கேணிப் பகுதியில் பாடசாலைக்கு அருகில் நேற்று இடம்பெற்ற விபத்தில் 8 வயதுச் சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார்.



கருநாட்டுக்கேணி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் தரம் 3இல் கல்வி கற்கும் 15ஆம் பக்கம் பார்க்க

## நாட்டின் உப்புத் தேவையைக்கூட அரசால் நிறைவேற்ற முடியவில்லை

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

நாட்டின் உப்புத் தேவையைக் கூட அநுர அரசாங்கத்தினால் நிறைவேற்ற முடியாமல் காணப்படுகின்றது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தியுள்ளார்.

நாட்டின் பொருளாதாரம் குறித்து நேற்று பாராளுமன்றத்தில் தனது கருத்துக்களை வெளியிட்டபோதே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் 02ஆம் பக்கம் பார்க்க



## யாழில் சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்ய வேண்டும்

### உலக வங்கிக் குழுவினரிடம் மாவட்டச் செயலாளர்



15ஆம் பக்கம் பார்க்க

## ஆசிரியர் கல்வியியலாளர்

### தரம் 3 நியமன பட்டியல் வெளியீடு

(கொழும்பு)

இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் (SLTES) 3ஆம் வகுப்புக்கு ஆட்சேர்ப்புக்கான வரையறுக்கப்பட்ட 02ஆம் பக்கம் பார்க்க

## சங்கானையில் கிரிக்கெட் பார்த்துக் கொண்டிருந்த

### 26 வயது இளைஞன் திடீர் மரணம்

(யாழ்ப்பாணம்)

சங்கானையில் தொலைக்காட்சியில் கிரிக்கெட் பார்த்துக் கொண்டிருந்த 26 வயது இளைஞன் ஒருவர் திடீரென மரணமடைந்துள்ளார்.

இதில் சங்கானை தேவாலய வீதியைச் சேர்ந்த பரமானந்தம் கோவிந் (வயது-26) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

குறித்த இளைஞன் நேற்று முன்தினம் இரவு உண 02ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறாது நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## நாட்டின்...

மேலும் தெரிவித்துள்ளதாவது,

நமது நாட்டில் தனிநபர் உப்பு நுகர்வு 9.2 கிராம் ஆகும். இதனை உலக சுகாதார ஸ்தாபனம் 5 கிராம் என்று கூறுகிறது. நமது நாட்டின் வருடாந்த உப்புத் தேவை 180,000 மெட்ரிக் தொன்கள் ஆக காணப்படுகின்றன.

அம்பாந்தோட்டை, பலடுபான பூந்தல, மன்னார், ஆனையிறவு போன்ற உப்பளங்களில் 140,000-150,000 தொன் வரை உற்பத்தி செய்யப்படுவதாகக் கூறப்படுகிறது.

எமது நாட்டின் உப்புத் தேவையை இது பூர்த்தி செய்கிறதா என்பதில் பிரச்சினை காணப்படுகிறது. இந்த அரசாங்கத்தால் கொஞ்சம் உப்பைக் கூட வழங்க முடியாது போயுள்ளது, அவ்வப்போது ஏற்படக்கூடிய பற்றாக் குறையைக் கூட இந்த அரசாங்கத் தால் கணிப்பிட முடியாது போயுள்ளது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். (ம-4,7)

## சங்கானையில்...

வருந்திவிட்டு தொலைக்காட்சி பார்த்துக்கொண்டிருந்தார்.

இதன்போது திடீரென நெஞ்சுவலி ஏற்பட்ட நிலையில் வீட்டிலேயே மயக்கமடைந்துள்ளார்.

இந்நிலையில் அவரை சங்கானை பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு சென்றவேளை அவர் உயிரிழந்துள்ளார். உடற்கூற்று பரிசோதனைகளுக்காக சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். இதய உறை அறைக்குள் இரத்தக்கசிவு ஏற்பட்டு மரணம் சம்பவித்துள்ளதாக உடற்கூற்று பரிசோதனைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4,7,104)

## ஆசிரியர்...

போட்டித் தேர்வுக்கான நியமனப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்பிரகாரம் தேர்வாகியுள்ள 605 நியமனதாரிகளில் 300 பேர் சிங்கள மொழி மூலமும், 202 பேர் தமிழ் மொழி மூலமும் 103 பேர் ஆங்கில மொழி மூலமும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நியமனம் ஜூன் மாதம் 2ம் திகதி வழங்கப்படவுள்ளது. (ம-4,7)

## போராட்டத்தை...

வழித்தட சேவையில் ஈடுபட்டுள்ள தனியார் பேருந்து உரிமையாளர்கள், சாரதிகள், நடத்துநர்கள் நேற்று வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட நிலையில் பொலிஸார் தலையிட்டு வழமை போன்று சேவையில் ஈடுபடுமாறு கூறியதையடுத்து போராட்டம் கைவிடப்பட்டுள்ளது. (ம-4,7)

(முன்னர் வந்த செய்தி உள்ளே)

## குடும்பஸ்தர்...

கலட்டியைச் சேர்ந்த செல்லத்துரை கதிர்வேல்(வயது 74) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இவரது உயிரிழப்பு தொடர்பான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபால சிங்கம் மேற்கொண்டார். (ம-4,7)

### நல்லூர் புனித பூமியில் அசைவ உணவகம்

# வடக்கு மாகாண ஆளுநரிடம் மகஜர் கையளிக்கத் தீர்மானம்

அண்மையில் நல்லூர் முன் வீதியில் திறக்கப்பட்ட அசைவ உணவகத்தை அகற்றுவது தொடர்பில் தமிழ்ச் சைவ பேரவையின் அழைப்பின் பெயரில் சைவ அமைப்புக்களின் விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று மாலை 6.30 மணியளவில் நல்லூர் சிவகுரு ஆதீனத்தில் இடம்பெற்றது.

இதன்போது நாளை வெள்ளிக் கிழமை(23) சைவ அமைப்புக்கள் மற்றும் ஆதீனங்கள், குருமார் ஒன்றியங்கள், ஆலய பரிபாலன சபையினர் தலைமையில் வடமாகாண ஆளுநரை சந்தித்து குறித்த அசைவக் கடையினை அகற்றுவது தொடர்பில் மகஜர் ஒன்றை கையளிப்பது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறித்த சந்திப்பில் கலந்துகொள்ள விரும்பும் அமைப்புக்கள் அல்லது ஆதரவு தெரிவிக்க விரும்பும் அமைப்புக்கள் இன்று நள்ளிரவிற்கு முன்னர் 077 075 6333 எனும் இலக்கத் திற்கு தொடர்பு கொள்ளுமாறும் கோரப்பட்டுள்ளது. (ம-4,7)

## பிளே ஆப்பிற்கு முன்னேறியது மும்பை



டெல்லி அணியை 59 ரன்கள் வித்தியாசத்தில் மும்பை இந்தியன்ஸ் அணி வீழ்த்தி பிளே ஆப் சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

நேற்று நடைபெற்ற இந்தியன் பிரீமியர் லீக் போட்டியில் மும்பை - டெல்லி அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற டெல்லி கேபிடல்ஸ் அணி முதலில் பந்து வீச்சைத் தேர்வு செய்தது.

இதன்படி முதலில் துடுப்பாட்டம் செய்த மும்பை இந்தியன்ஸ் அணி 20 ஓவர்களில் 5 விக்கெட் இழப்புக்கு 180 ஓட்டங்கள் எடுத்தது.

இதையடுத்து 181 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பாட்டம் செய்த டெல்லி கேபிடல்ஸ் அணி 18.2 பந்துப்பரிமாற்றங்கள் மட்டுமே தாக்குப்பிடித்து 121 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது.

இதன் மூலம் மும்பை அணி 59 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் மும்பை அணி 11ஆவது முறையாக பிளே ஆப் சுற்றுக்கு முன்னேறியது. (ம-4,7)


# மரண அறிவித்தல்



மலர்வு 17.02.1970

உதிர்வு 21.05.2025

## திருமதி இந்திரகுமார் நாகநந்தினி

இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இந்திரகுமார் நாகநந்தினி அவர்கள் நேற்று 21.05.2025 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் குமாரசாமி - இராசமலர் தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சோமசுந்தரம் - கமலாதேவி தம்பதியினரின் அன்பு மருமகளும் இந்திரகுமார்(தபால் திணைக்கள உத்தியோகத்தர் - யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும் விதுஷன், துளசிகா, சுவஷ்திகா ஆகியோரின் அன்புத் தாயாரும் இந்திரகுமாரன்(சுவிஸ்), சுதாசினி(சுவிஸ்), துஷ்யந்தி(பிரதேச செயலகம் - உடுவில்) ஆகியோரின் சகோதரியும் கயல்விழி, பிரபாகரன், கணேந்திரன், சாந்தகுமாரி, ரவிக்குமார், ராஜேந்திரன், காலஞ்சென்றவர்களான சாந்தகுமார், வசந்தகுமார், ஜெயகுமாரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை 23.05.2025 வெள்ளிக்கிழமை பி.ப 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

"இந்திரவாசம்"
அளவோடை வீதி,
இணுவில் மேற்கு,
இணுவில்.

(4351)

தகவல்:
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி அபகரிப்பு, பௌத்தமயமாக்கலை தடுத்து நிறுத்துங்கள்!

## ஐரோப்பிய ஒன்றிய சுவிஸ் இராஜதந்திரிகளிடம் தமிழ் தேசியப் பேரவை கோரிக்கை



**(கொழும்பு) ..................**

**வடக்கிலுள்ள காணிகள் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல், குருந்தூர் மலை விவகாரம், தையிட்டியில் விகாரை நிர்மாணம் என்பன உள்ளடங்கலாக வட, கிழக்கு மாகாணங்களில் முன்னெடுக்கப்பட்டு வரும் காணி சுவீகரிப்பு முயற்சிகள் தொல்பொருள் அடையாளங்கள் பௌத்த மயப்படுத்தல் என்பவற்றை தடுப்பதற்கு சர்வதேச சமூகம் தலையிட வேண்டும் என தமிழ் தேசிய பேரவை வலியுறுத்தியுள்ளது.**

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் தலைமையிலான தமிழ்த் தேசிய பேரவையில் அங்கம் வகிக்கும் பிரதிநிதிகளுக்கும், கொழும்பிலுள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் செவ்வாய் கிழமை இடம்பெற்றது. இதன் போது மேற்குறிப்பிடப்பட்ட விடயங்கள் தெரிவிக்கப்பட்டன.

வடமாகாணத்தில் உள்ள உரிமைகோரப்படாத சுமார் 3000 ஏக்கர் காணிகள் தொடர்பில் கடந்த மார்ச் மாதம் 28 ஆம் திகதியிடப்பட்டு அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை இடைநிறுத்துவதாக அரசாங்கம் அறிவித்திருப்பது ஏமாற்று வேலை எனச் சுட்டிக்காட்டப்பட்டதுடன், அதனை அரசாங்கம் உடனடியாக மீளப்பெற வேண்டியதன் அவசியம் தொடர்பிலும் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டது.

அடுத்ததாக கடந்த ஆட்சியின்போது குருந்தூர் மலையில் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த 79 ஏக்கர் காணிக்கு அப்பால், விகாரையை நிர்மாணிப்பதற்கு மேலும் 325 ஏக்கர் காணி தேவைப்படுவதாக அதனுடன் தொடர்புடைய பௌத்த பிக்கு கோரிக்கைவிடுத்திருந்தார். இருப்பினும் அக்காணிகள் மக்களின் விவசாய நடவடிக்கைகளுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டதன் பின்னர், அண்மையில் அக்காணியில் விவசாயத்தில் ஈடுபட்ட இருவர் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவம் தொடர்பில் இராஜதந்திரிகளிடம் எடுத்துரைக்கப்பட்டதுடன், இவ்விடயத்தில் ஜனாதிபதி மட்டத்தில் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னரும் கூட, சம்பந்தப்பட்ட பௌத்த தேரர் உள்ளிட்ட தரப்பினர் அதற்கு முரணாக செயற்படுவது பற்றி விசனம் வெளியிடப்பட்டது.

அதேவேளை தையிட்டியில் சட்டவிரோதமாக நிர்மாணிக்கப்பட்டிருக்கும் விகாரை குறித்தும், குச்சவெளியில் 32 சைவ தொல்பொருள் அடையாளங்களை பௌத்த அடையாளங்களாக மாற்றுவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சி குறித்தும் இராஜதந்திரிகளின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதுடன், தொல்பொருள் அடையாளங்கள் அவ்வாறே தொடர்ந்து பேணப்பட வேண்டுமே தவிர, அவற்றை பௌத்த மயப்படுத்தக்கூடாது எனவும் வலியுறுத்தப்பட்டது. மேலும் இவ்விடயங்கள் தொடர்பில் சர்வதேச சமூகத்தின் தலையீடு அவசியம் எனவும், இவை குறித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் ஆராயப்பட வேண்டும் எனவும் இராஜதந்திரகளிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. (நி-8)

# அரச வைத்தியசாலைகளில் மருந்துகள் பற்றாக்குறை

## அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)


நாட்டிலுள்ள பல அரச வைத்தியசாலைகளில் தற்போது மருந்துகளுக்கு கடுமையான பற்றாக்குறை நிலவுவதாக அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்க ஊடகப் பேச்சாளர் வைத்தியர் சமில் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

அத்தோடு, நுண்ணுயிர் எதிர்ப்பிகளுடன், வலி நிவாரணிகள் மற்றும் இன்சுலின் ஆகியவற்றிற்கும் கடுமையான பற்றாக்குறை நிலவுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த ஏப்ரல் மாத இறுதிக்குள், வைத்திய விநியோகப் பிரிவில் சுமார் 180 வகையான மருந்துகள் கையிருப்பில் இல்லை. மேலும், வைத்தியசாலை அமைப்பில் சுமார் 50 மருந்துகள் கையிருப்பில் இல்லை. நிலைமை இன்னும் மோசமாகிக் கொண்டிருக் கிறது.

இதய நோய் மற்றும் உயர் இரத்த அழுத்தம் போன்ற நோய்களுக்கு வழங்கப்படும் மருந்துகள் மற்றும் அறுவை சிகிச்சைக்காக வழங்கப்படும் சில உபகரணங்களின் பற்றாக்குறையும் காணப்படுகிறது.

இதற்கிடையில், பல கோரிக்கைகளை முன்வைத்து இன்று நாடு தழுவிய அடையாள வேலை நிறுத்தம் முன்னெடுக்கப்படும் என்று நிறைவு காண் வைத்திய தொழில் வல்லுநர்களின் ஒன்றியத்தின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார். (நி)



வரணி- குடமியன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்களின் சிறுவர் சந்தை நிகழ்வு அண்மையில் பாடசாலை அதிபர் கா.நிமலநாதன் தலைமையில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது. தென்மராட்சிக் கல்வி வலய ஆரம்பக் கல்விப்பிரிவு ஆசிரிய ஆலோசகர் ந.திருவாசகன் விருந்தினராகக் கலந்துகொண்டு சிறுவர் சந்தை நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். (படம்- சுபேசன்)

# சர்வதேச புத்தகக் கண்காட்சி















சர்வதேச புத்தகக் கண்காட்சி யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று ஆரம்பமானது. பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்த வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் நாடா வெட்டி கண்காட்சிக் கூடத்தை சம்பிரதாயபூர்வமாக திறந்துவைத்தார். இக் கண்காட்சியானது எதிர்வரும் 25.05.2025 வரை, காலை 9.00 தொடக்கம் இரவு 9.30 மணிவரை நடைபெறும். மேலும் இந்த கண்காட்சியின்போது க.பொ.த உயர்தர பரீட்சையில் யாழ். மாவட்ட ரீதியாக முதலிடம் பெற்று சாதனை புரிந்த மாணவர்களும் கௌரவிக்கப்பட்டனர். (படங்கள்- கஜிந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆசீர்வாதம் பண்ணு தலைவா!

## தோனியின் காலைத் தொட்டு வணங்கிய வைபவ் சூர்யவன்ஷி




ஐபிஎல் தொடரின் 62 ஆவது லீக் ஆட்டம் டில்லியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இதில் ராஜஸ்தான் ராயல்ஸ், சென்னை சூப்பர் கிங்ஸ் அணிகள் மோதின. போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற ராஜஸ்தான் அணி பந்துவீச்சை தேர்வு செய்தது.

இப்போட்டியில் சிறப் பாக விளையாடிய ராஜ ஸ்தான் அணி வீரர் வைபவ் சூர்யவன்ஷி அரைசதம் அடித்து அசத்தினார்.

இந்நிலையில், போட்டி முடிந்து இரு அணி வீரர்களும் கைகுலுக்கும்போது டோனியின் காலை தொட்டு வைபவ் சூர்யவன்ஷி வணங்கினார். இது தொடர்பான வீடியோ இணையத்தில் வைரலாகி வருகிறது. (நி-3)

# மோசமான சாதனை படைத்த சென்னை சூப்பர் கிங்ஸ்




டில்லியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஐ.பி.எல் தொடரின் 62 ஆவது போட்டியில் ராஜஸ்தான் ராயல்ஸ், சென்னை சூப்பர் கிங்ஸ் அணிகள் மோதின. இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற ராஜஸ் தான் அணி முதலில் பந்துவீச்சை தேர்வு செய்தது.

அதன்படி, முதலில் துடுப்பெடுத் தாட ஆரம்பித்த சென்னை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 187 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய ராஜஸ்தான் அணி 17.1 ஓவர்களில் 4 விக்கெட்டுகளுக்கு 188 ஓட்டங்களை எடுத்து அபார வெற்றி பெற்றது. இது ராஜஸ்தான் பெற்ற 4 ஆவது வெற்றி ஆகும்.

இந்நிலையில், 2022 ஆம் ஆண்டுக்குப் பிறகு நடப்பு சீசனிலும் அதிக பட்சமாக 10 போட்டிகளில் சென்னை அணி தோல்வியை சந்தித் துள்ளது.

நடப்பு ஐ.பி.எல் தொடரில் 13 போட் டிகளில் விளையாடியுள்ள சென்னை அணி 10 போட்டிகளில் தோல்வியை சந்தித்துள்ளது. இந்நிலையில் எதிர்வரும் 25 ஆம் திகதி இடம்பெறவுள்ள சென்னை அணியின் இறுதிப் போட்டியில் குஜராத்தை எதிர்கொள்ளவுள்ள மையும் குறிப்பிடத்தக்கது. (நி-3)

# ஆசிய குத்துச்சண்டை சம்பியன்ஷிப் இலங்கைக்கு 3 வெண்கலப் பதக்கங்கள்



கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் நடைபெற்றுவரும் ஆசிய 22 வயதுக்குட்பட்ட மற்றும் இளையோர் குத்துச்சண்டை சம்பியன்ஷிப்பில் இலங்கையின் பதக்க எண்ணிக்கை 14 உயர்ந் துள்ளது.

போட்டியின் எட்டாம் நாளான நேற்று முன்தினம் செவ் வாய்க்கிழமை நடைபெற்ற குத்துச்சண்டை போட்டிகளில் இளையோர் பெண்கள் பிரிவில் ஹிருணி பெர்னாண்டோவும் மாலிதி தித்தகால்லவும் ஆண் கள் பிரிவில் சன்ச்சித் பெரே ராவும் இலங்கைக்கு வெண்கலப் பதக்கங்களை வென்று கொடுத் தனர்.

ஹிருணி பதக்கம் வென்றதன் மூலம் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் இப் போட்டியில் பதக்கம் வென்று வரலாறு படைத்தனர்.

ஹிருணியின் மூத்த இரட்டை சகோதரிகளான சச்சினி, யசினி ஆகிய இருவரும் ஏற்கனவே வெண்கலப் பதக்கங்கள் வென் றிருந்தனர்.

அத்துடன் இந்த மூவருமே ஆசிய குத்துச்சண்டை சம்பியன் ஷிப்பில் மூன்று சுற்றுகளும் தாக்குப் பிடித்து சிறப்பாக சண்டை யிட்டிருந்தனர்.

54 கிலோ கிராம் எடைப் பிரிவு அரை இறுதிப் போட்டியில் வியட்நாம் வீராங்கனை வூ தி தொம் என்பவருக்கு ஈடுகொடுத்து சண்டையிட்ட ஹிருணி 3 சுற்று களையும் தாக்குப் பிடித்து பலத்த பாராட்டைப் பெற்றார். எனினும் இறுதியில் 0 - 5 (26 - 30, 25 - 30, 24 - 30, 26 - 30, 25 - 30) என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் ஹிருணி தோல்வி அடைந்தார்.

57 கிலோ கிராம் எடைப் பிரிவு அரை இறுதிப் போட்டியில் கஸக்ஸ் தான் வீராங்கனை துர்சிங்காலி அக்நூர் என்பவருக்கு எதிராக 3 சுற்றுக்களிலும் ஓரளவு திறமை யாக சண்டையிட்ட மாலிதி தித்த கால்ல 0 - 5 (24 - 30, 24 - 30, 25 - 30, 24 - 30, 23 - 30) என்ற புள்ளிகள் அடிப்படை யில் தோல்வி அடைந்தார்.

ஆண்களுக்கான 75 கிலோ கிராம் எடைப் பிரிவு அரை இறுதிப் போட்டியில் கஸக்ஸ்தான் வீரர் பேர்ட்அலி ஸாசுலானின் கொடூரமான தாக்குதல்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல் முதல் சுற்றிலேயே சன்ச்சித் பெரேரா வெளியேறினார். (நி-3)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நெல்லியடி வர்த்தக நிலையத்தில் தீ விபத்து; பொருட்கள் நாசம்

(கரணவாய்)

யாழ். நெல்லியடி நகர்ப்பகுதியில் நேற்று புதன்கிழமை அதிகாலை வர்த்தக நிலையத்தில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

யாழ். மாநகர சபை தீ அணைப்பு பிரிவுக்கு தகவல் வழங்கி ஸ்தலத்திற்கு தீயணைப்பு படையும் வருகை தந்திருந்த போதும் பிரதேச சபையின் ஊழியர்களின் முயற்சியும் பொது மக்களின் பங்களிப்புடனும் ஏனைய இடங்களுக்கும் பரவாமல் தீ கட்டுப்பாடுகள் கொண்டு வரப்பட்டது.

குறித்த தீ விபத்தினால் வர்த்தக நிலையத்தில் இருந்த பெருமளவு பொருட்கள் சேதமாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (நி-8-60)

## கண்ணீர் அஞ்சலி

யா/கொக்குவில் ஸ்தான சி.சி.த.க பாடசாலையின் முன்னாள் அதிபர் திருமதி.யோகலட்சுமி திரவியநாதன் அவர்களின் அன்பு மாமியார்

### திருமதி மகேஸ்வரி இராமச்சந்திரன்



அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர்கள்: திருமதி.த.தர்மரத்தினம், திருமதி.வ.பிறைசூடி, திரு.ச.சுதாகரன்

(1157)

## கண்ணீர் அஞ்சலி



மண்ணில் 24.03.1950 விண்ணில் 20.05.2025

சங்குவேலி, மானிப்பாயை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட எமது சங்கத்தின் ஓய்வு பெற்ற அங்கத்தவராகிய

### அமரர். மயில்வாகனம் பஞ்சலிங்கம்

அவர்கள் 20.05.2025 அன்று இறைபதமடைந்தார். அன்னாரது குடும்பத்தினருக்கும், உற்றார் உறவினர்களுக்கும் எமது சங்கத்தின் அங்கத்தவர்கள், பணிப்பாளர்கள், பணியாளர்கள் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்வதோடு, அவரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்... அங்கத்தவர்கள், பணிப்பாளர்கள், பணியாளர்கள், சுன்னாகம் ப.தெ.வ.அ.கூ.சங்கம் (மின்சார நிலைய வீதி, சுன்னாகம்)

(c-3015)

YALPANAM INTERNATIONAL BOOK FAIR
யாழ்ப்பாணம் சர்வதேச புத்தகக் கண்காட்சி
இன்னும் 03 நாட்கள் மட்டுமே!
YALPANAM INTERNATIONAL BOOK FAIR
• Leading Book Sellers
• Book Publishers
• Stationery Sellers
• Local & International
மே | MAY
21 22 23 24 25
Silver Sponsors
ENTRANCE FREE
யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபம்
Weerasingham Hall Jaffna
9.30 A.M - 8.00 P.M
Official TV Partner
Official News Paper வலம்புரி
Organized by

## இராசிபலன்

22.05.2025
வைகாசி 08, வியாழக்கிழமை
தசமி முன்னிரவு 9.03 மணிவரை

பூரட்டாதி பிற்பகல் 1.53 மணிவரை
சுபநேரம் 7.22-8.52 மணிவரை
இராகுகாலம் 1.22-2.52மணிவரை

சந்திராஷ்டமம்- மகம், பூரம்

வளவன்

**மேஷம்** வழக்கத்தை விட கூடுதல் நேரம் பணிபுரியும் சூழ்நிலை ஏற்படலாம், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும் வாய்ப்புண்டு, நண்பர்கள் கடைசி நேரத்தில் கைகொடுத்து உதவுவர்.

**ரிஷபம்** மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், பொது வாழ்வில் கௌரவம் அந்தஸ்து உயரும், வாகன சுகமுண்டு, பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள்.

**மிதுனம்** மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், அரசு வழியில் அனுகூலமுண்டு, தொழில் வளர்ச்சி கூடும் நாள், பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள்.

**கடகம்** கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**சிம்மம்** நேசித்த ஒருவருடன் யோசித்துப் பேசும் சூழ்நிலை ஏற்படலாம், வாகனப் பழுதுச் செலவுகள் ஏற்படலாம், வழிபாட்டால் வளர்ச்சி கூடும் நாள், புதிய முயற்சிகளில் கவனம் தேவை.

**கன்னி** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள், பயணங்கள் செல்ல போட்ட திட்டங்கள் கைகூடும், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**துலாம்** செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், தலைமைப் பதவிகள் உங்களைத் தேடி வரலாம், கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், உடல் நலன் சீராகும்.

**விருச்சிகம்** எதிர்பார்த்த தனவரவுகள் வந்து சேரலாம், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், தொலைதூரத்து உறவுகளில் சந்திப்பு இடம்பெறலாம்.

**தனுசு** பாசமிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**மகரம்** சிலர் தொழில் ரீதியாக உதவிகள் நாடி வரலாம், பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், சகோதர வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும்.

**கும்பம்** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைத்து உற்சாகமடைவீர்கள், நண்பர்களால் வளர்ச்சி கூடும், பயணங்களால் பலன் கிடைக்கும், வாக்கு மேன்மையுண்டு.

**மீனம்** குடும்ப இரகசியங்களை மற்றவர்களிடம் சொல்லாதிருப்பது நல்லது, பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறுவீர்கள், புதிய நட்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

நியாயத்தைச் சொன்னாலும் அதிக செல்வமுடையவர்கள் கேட்கமாட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகிரங்க ஏலவிற்பனை


(யாழ்ப்பாணம்)

மல்லாகம் நீதிவான் நீதிமன்றினால் அரசுடமையாக்கப்பட்ட சான்றுப் பொருட்களான கையடக்கத் தொலைபேசிகள், துவிச்சக்கரவண்டிகள், மீன்பிடி படகுகளும் மீன்பிடி இயந்திரங்களும் மற்றும் இதர பொருட்கள் என்பன நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 09.30 மணிக்கு நீதிமன்ற வளாகத்தில் பகிரங்க ஏலவிற்பனை செய்யப்படவுள்ளது.

மேலும் ஏலத்தில் வாங்கப்படும் பொருட்களை உடன் பணம் செலுத்திப் பெற்றுக் கொள்வதோடு நீதிமன்ற வளாகத்திலிருந்து அன்றைய தினமே அப்புறப்படுத்தல் வேண்டும்.

அத்துடன் ஏலத்தினைக் கோருபவர்கள் தமது தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு அல்லது சாரதி அனுமதிப் பத்திரத்துடன் வருகை தர வேண்டும் என மல்லாகம் நீதிவான் நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். (3-8)

## 769 வழித்தட சேவையில் ஈடுபட்டுள்ள தனியார் பேருந்து சாரதிகள் போராட்டத்தில் குதிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் 769 வழித்தட சேவையில் ஈடுபட்டுள்ள தனியார் பேருந்து உரிமையாளர்கள், சாரதிகள், நடத்துனர்கள் நேற்று புதன்கிழமை முதல் பணி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளதுடன், மயிலிட்டி பகுதியில் வீதி மறியல் போராட்டத்திலும் ஈடுபட்டுள்ளனர்.

மயிலிட்டி பகுதியில் இருந்து தமது சேவைகளை ஆரம்பிக்க அனுமதி கோரியே அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

யாழ்ப்பாண நகர் பகுதியில் இருந்து புறப்படும் 764 வழித்தட பேருந்துகள் கடந்த காலங்களில், வசாவிளான் சந்தியில் இருந்து, பருத்தித்துறை - பொன்னாலை வீதி வரையிலான பலாலி வீதி உயர் பாதுகாப்பு வலயத்தினுள் காணப்பட்டமையால் ,வசாவிளான் சந்தியுடன் தமது சேவைகளை மட்டுப்படுத்தி இருந்தன.

அதனால் மயிலிட்டி பகுதியில் வசிக்கும் மக்களின் நலன் கருதி , யாழ்ப்பாண நகரில் இருந்து புறப்படும் ,769 வழித்தட பேருந்துகள் மயிலிட்டி வரையில் சேவையில் ஈடுபட்டது.

தற்போது உயர்பாதுகாப்பு வலயத்தின் ஊடாக செல்லும் பலாலி வீதி திறக்கப்பட்டுள்ளமையால் , யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்படும் 764 வழித்தட பேருந்துகள் யாழ்ப்பாண நகரில் இருந்து புறப்பட்டு பலாலி வீதியூடாக பருத்தித்துறை - பொன்னாலை வீதியை அடைந்து அதனூடாக காங்கேசன்துறை புகையிரத நிலையத்திற்கு அருகில் உள்ள பேருந்து நிலையம் வரையில் சேவையில் ஈடுபடுகிறது.

அதேபோன்று காங்கேசன்துறை புகையிரத நிலையத்திற்கு அருகில் இருந்து புறப்பட்டு யாழ்ப்பாணத்தை வந்தடைகிறது.

இந்நிலையில் 769 வழித்தட அனுமதியில் சேவையில் ஈடுபட்ட தனியார் பேருந்து உரிமையாளர்கள் தாம் இது வரை காலமும் மயிலிட்டியில் இருந்து சேவையை ஆரம்பித்தது போன்று ஆரம்பிக்கவும் யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்பட்டு , காங்கேசன்துறை வீதி வழியாக மயிலிட்டி வரையில் சேவையில் ஈடுபட அனுமதிக்க வேண்டும் என கோரியே போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்

அதேவேளை 764 மற்றும் 769 ஆகிய வழித்தடங்களின் பேருந்து சேவைகளை காங்கேசன்துறை புகையிரத நிலையத்திற்கு அருகில் இருந்து ஆரம்பிக்குமாறும் அதை மீறிச் செயற்படும் பேருந்துகளுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்குமாறும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் பணிப்புரை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8-33)

## மல்லாகம் பெரிய தம்பிரானின் வைகாசிப் பெரும் பொங்கல்

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் திருமருஞ்சோலை பெரிய தம்பிரான் ஆலய வருடாந்த வைகாசிப் பெரும் பொங்கல் எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிமுதல் இடம்பெறவுள்ளது.

பெரும் பொங்கலுக்கு முன்னதாக நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8 மணிக்கு சாடிமனைப் பொங்கலும் அன்று மாலை 5.30 மணிக்கு பண்டமெடுத்தலும் இடம்பெறவுள்ளது.

அத்துடன் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பெரும் பொங்கலன்று மதியம் 12 மணிக்கு தீ மிதிப்பும் இடம்பெறவுள்ளது என மல்லாகம் பெரிய தம்பிரான் ஆலய பூசகர் தெரிவித்துள்ளார். (நி-3-8)

## திருமறைக்கலாமன்ற அரங்கில் இசை நடன இரவு




(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியில் நுண்கலைப் பாடங்களைப் பயில்கின்ற மாணவர்களின் கல்வி மேம்பாட்டு நிதிக்காக நடத்தப்படுகின்ற "இசை நடன இரவு" என்ற மாபெரும் நிகழ்ச்சி நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு இல.238, பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்ச்சிக்கான அனுமதிகளை பார்வையாளர்கள் திருமறைக்கலாமன்ற அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)

## நுளம்பு கட்டுப்பாட்டு வாரம் இன்று முதல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)


விஷேட நுளம்பு கட்டுப்பாட்டு வார நிகழ்வு 2025 வைகாசி மாதம் 22-24 ஆம் திகதி வரை மாநகரசபை எல்லைக்குட்பட்ட பிரதேசம் முழுவதிலும் மேற்கொள்ளப்படவுள்ளது. இதன் மூலமே அதிகரித்து வரும் டெங்கு பரவலிலிருந்தும் நோய்த்தாக்கத்திலிருந்தம் விடுபட முடியும்.

இந்த விஷேட நிகழ்வு, அதன் நோக்கத்தை நிறைவு செய்யும்வகையில் அமைந்திட சகலரும் ஒத்துழைப்புக்கள் வழங்கி தங்கள் வாழிடங்கள், சமய நிறுவனங்கள், அரச, தனியார் நிறுவனங்கள் மற்றும் பொதுச் சந்தைகள், மயானங்கள் என்பவற்றின் சுற்றுச்சூழலை துப்பரவாக பேணுமாறு யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி தெரி வித்துள்ளார்.

இம்முறை டெங்கு பெருக்கத்திற்கு சாதகமான நிலைமைகள் காணப்படும். அனைத்த அரச தனியார் நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகள், வீடுகள், மண்டபங்கள், ஆலயங்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

எனவே அனைவரும் தங்கள் சூழலை டெங்கு பெருகாதவாறு சுத்தமாக வைத்திருப்பதுடன் அன்றைய தினம் தங்கள் வீடுகளில் தரித்திருந்து களத்தரிசிப்பிற்கு வருபவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு தெரிவித்தார். (நி-8)

## சந்தைகளில் நேற்றைய விலை



| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 300 | 400 | 350 | 350 |
| உருளைக்கிழங்கு | 220 | 230 | 220 | 200 | 220 |
| பச்சைமிளகாய் | 250 | 200 | 220 | 150 | 250 |
| தக்காளி | 900 | 800 | 1000 | 750 | 800 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 300 | 250 | 200 |
| கோவா | 400 | 550 | 550 | 350 | 600 |
| கரட் | 800 | 950 | 1000 | 800 | 1000 |
| பூசணி | 160 | 200 | 170 | 150 | 200 |
| புடோல் | 200 | 300 | 200 | 200 | 300 |
| வாழைக்காய் | 100 | 120 | 80 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 300 | 120-300 | 300 | 250 | 400 |
| பெரிய வெங்காயம் | 120 | 150 | 120 | 110 | 120 |
| பாகற்காய் | 800 | 650 | 800 | 600 | 800 |
| வெண்டக்காய் | 300 | 150 | 200 | 120 | 350 |
| கருணைக் கிழங்கு | 300 | 250 | 250 | -- | 320 |
| பயற்றங்காய் | 200 | 250 | 200 | 200 | 200 |
| லீக்ஸ் | 350 | 350 | 350 | 220 | 400 |
| பீற்றூட் | 600 | 450 | 500 | 400 | 600 |
| கறிமிளகாய் | 800 | 500 | 500 | 500 | 800 |
| முருங்கைக்காய் | 1000 | 1500 | 1000 | 850 | 1000 |
| போஞ்சி | 400 | 550 | 800 | 400 | 600 |
| கத்தரிதம்புள்ள | 350 | 250 | 300 | -- | 300 |
| கீரை – 1 பிடி | 140 | 100-180 | 200 | 100 | 150 |
| தேசிக்காய் | 300 | 400 | 250 | 300 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 250 | 150 | 100-200 | 200-240 |
| இராசவள்ளி | 600 | 600 | 500 | 500 | 600 |
| வெங்காயப்பூ | 800 | 400 | 600 | -- | 600 |
| முள்ளங்கி | 100 | 150 | 200 | 150 | 400 |
| பொன்னாங்காணி | 120 | 60 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 70 | 100 | 80 | 80 |
| [illegible] | 150 | -- | 100 | -- | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபத்துக்கள் ஏற்படக்கூடிய இடங்களுக்கு பாதுகாப்பு வேலிகள்- வீதி அபிவிருத்தி அதிகாரசபை



(கொழும்பு)

மத்திய மலைநாட்டில் வாகன விபத்துக்கள் ஏற்படக் கூடிய பகுதிகளில் வீதிகளின் இருபுறமும் பாதுகாப்பு வேலி களை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமென வீதி அபிவிரு த்தி அதிகாரசபை தெரிவித் துள்ளது. கடந்த காலங்களில் வாகன விபத்துக்கள் ஏற்பட்ட இடங்கள் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்டத்தில் மாத்திரம் விபத்துக்கள் ஏற்படக் கூடிய சுமார் 500 இடங்கள் அடையாளம் காணப்பட்டுள் ளதாக வீதி அபிவிருத்தி அதி காரசபை குறிப்பிட்டுள்ளது.

அவற்றில் 40 இடங்களுக் கான பாதுகாப்பு வேலிகள் அமைக்கும் பணிகள் நிறை வடைந்துள்ளதாக வீதி அபி விருத்தி அதிகாரசபை மேலும் தெரிவித்தது. (நி)

## வலிகாமம் வடக்கு பிரதேசசபை மயிலிட்டி உப அலுவலகம் ஆதனப்பெயர் மாற்ற அறிவித்தல்

விண்ணப்பதாரர் பொன்னையா ஆறுமுகம்

வலிகாமம் வடக்கு பிரதேசசபை மயிலிட்டி உப அலுவலகத்திற்கு உட்பட்ட ஞானவைரவர் கோயில் வீதி என்னும் முகவரியில் அமைந்துள்ள இவ்ஆதனம் ஆதனப்பதிவேட்டில் வட்டாரம் 16 இல் அமைந்துள்ளது.

குறித்த ஆதனம் பிரசித்தநொத்தாரிஸ் வீரகத்திப்பிள்ளை கௌதமன் முகதாவில் உறுதி இலக்கம் 1503 ஆம் இலக்கத்தில் 04.05.2021 அன்று நிறைவேறிய அறுதி உறுதியின் பிரகாரம் குறித்த பொன்னையா ஆறுமுகத்திற்கு வந்தடைந்தது.

**ஆதனவிபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் வடக்குபகுதி தெல்லிப்பளை கோவிற்பற்றும் கட்டுவன் இறை இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் S.கஜேந்திரன் அவர்களின் 18.4.2021 ஆம் திகதிய 0130 ஆம் இலக்க வரை படத்தின்படி இலக்கம் துண்டு 05.06 ஆகும்.

**இதற்குஎல்லைகள்**

கிழக்கு ஒழுங்கை
வடக்கு 4ஆம் துண்டு 02 ஆம் துண்டு
மேற்கு துண்டு 07
தெற்கு றோட்டு

மேற்குறித்த ஆதனத்தை பொன்னையா ஆறுமுகம் என்னும் பெயரில் பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறு யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு பெயர் மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்தஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன். (4348)

**செயலாளர்**
**வலிகாமம் வடக்குபிரதேசசபை காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)**

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் ஆதனப் பெயர் மாற்றம்

**46, விசவத்தனை முருகமூர்த்தி கோவில் வீதி,வட்டாரம்-12**

வலிகாமம் மேற்கு பிரதேச சபை சுழிபுரம் உப அலுவகத்திற்குட்பட்ட வட்டாரம் 12 விசவத்தனை முருகமூர்த்தி கோவில் வீதியிலுள்ள இல .46 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் **கிருஸ்ணர் கை/பெ ஆச்சிப்பிள்ளை** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை கிருஸ்ணர் நடராசா ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு பொ. சிவபாலன் முகதாவில் நிறைவேற்றப்பட் 486/13.11.1986ஆம் இலக்க உறுதியால் கிருஸ்ணர் நடராசா பெண் மகாராணி ஆகியவரிடமிருந்து நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார். குறித்த உறுதியில் அடி உறுதி பற்றிய விபரங்கள் எதுவும் குறிப்பிடப்படாது குறித்த உறுதியானது நிறைவேற்றப்பட்டுள்ளது.

நடராசா **கிருஸ்ணமூர்த்தி** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு ப.இராசகுரு முகதாவில் நிறைவேற்றப்பட் 2008/26.01.1997ஆம் இலக்க உறுதியால் குறித்த **கிருஸ்ணர் நடராசாவும் பெண் மகாராணியும்** ஆகியவர்களிடமிருந்து குறித்த ஆதனத்தினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**ஸ்ரீராசசுந்தரம் கைம்பெண் எழில்வதனி** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு சோ.தேவராஜா முகதாவில் நிறைவேற்றப்பட் 10349/16.01.2024ஆம் இலக்க உறுதியால் குறித்த **நடராசா கிருஸ்ணமூர்த்தியும் பெண் யோகேஸ்வரியும்** ஆகியவர்களிடமிருந்து குறித்த ஆதனத்தினை நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த **ஸ்ரீராசசுந்தரம் கைம்பெண் எழில்வதனி** ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **ஸ்ரீராசசுந்தரம் கைம்பெண் எழில்வதனி** ஆகியவருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**செயலாளர், வலிகாமம் மேற்கு பிரதேசசபை**

## கெஹெலியவின் மகன் கைது

(கொழும்பு)

வாக்குமூலம் வழங்கு வதற்காக கையூட்டல் ஒழிப்பு ஆணைக்குழுவில் முன்னிலையாகியிருந்த முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல வின் மகன் ரமித் ரம்புக் வெல்ல கைது செய்யப்பட் டுள்ளார்.

கையூட்டல் ஒழிப்பு ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கொன்றில் ரமித் ரம் புக்வெல்லவை சந்தேக நபராகப் பெயரிடுவதற்கு கொழும்பு பிரதான நீத வான் தனுஜா லக்மாலி நேற்று முன்தினம் அனு மதி வழங்கியிருந்தார்.

அத்துடன், நேற்று குறித்த ஆணைக் குழு வில் முன்னிலையாகி வாக்குமூலம் வழங்கு மாறும் அவருக்கு உத்தர விடப்பட்டிருந்தது.

இதன்படி, ரமித் ரம்புக் வெல்ல கையூட்டல் ஒழி ப்பு ஆணைக்குழுவில் முன்னிலையாகி வாக்கு மூலம் வழங்கிய நிலை யில் கைது செய்யப்பட்டுள் ளார். (நி-8)


**தும்பளை நெல்லண்டை பத்திரகாளி அம்மன் கோயில் வருடாந்த வெளிமடை உற்சவம் - 30.05.2025**

**தற்காலிக கடை வழங்குதல் பற்றிய அறிவித்தல்**

கோயில் வளாகத்தினுள் கடைகள் வைப்பதற்கு அனுமதி இல்லை. கடைகள் வைப்பதற்கு மாற்று ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. கடை வைக்க விரும்புவோர் 28.05.2025 புதன்கிழமை காலை 10 மணியளவில் தும்பளை நெ.ப.அ.கோ சபை காரியாலயத்திற்கு சமூகமளிக்கவும்.
**கடை வழங்குதல் 10.00 மணியில் இருந்து 12.00 மணி வரை நடைபெறும்.**

**தும்பளை நெல்லண்டை அம்மன் கோயில், தரும பரிபாலன சபை**

(சி-3014)



ஸ்தாபிதம் 1945.05.31

பதிவு இல HA/S/JA/419

**அருள்மிகு தும்பளை நெல்லண்டை பத்திரகாளி அம்மன் கோவில் வருடாந்த வெளிமடை உற்சவம் 2025**

அம்பாள் அடியார்களே!

நிகழும் விசுவாவசு வருடம் வைகாசிமாதம் மேற்படி ஆலயத்தின் வெளிமடை நிகழ்வுகள் பின்வரும் ஒழுங்கு முறையில் நடைபெற அம்மன் அருள்பாலித்திருக்கிறது. எனவே அடியவர்கள் அனைவரும் ஆசாரசீலர்களாக கலந்து கொண்டு எம்பெருமாட்டியின் இஷ்டசித்திகளை பெற்றுய்வீர்களாக.

| | |
|---|---|
| விளக்கு வைப்பு | 23.05.2025 வெள்ளிக்கிழமை காலைப் பூசையுடன் இடம்பெறும். |
| மடைப்பண்டம் எடுத்தல் | 30.05.2025 வெள்ளிக்கிழமை பி.ப 3.30 மணி பூசையினைத் தொடர்ந்து இடம்பெறும். |
| வெளிமடைப் பூசை | 31.05.2025 சனிக்கிழமை காலை 7.00 மணிக்கு இடம்பெறும். |
| 8ஆம் மடை | 06.06.2025 வெள்ளிக்கிழமை மாலைப் பூசையுடன் நடைபெறும். |

- காவடி, கரகம், பாற்செம்பு, கற்பூரச்சட்டி போன்ற நேர்த்திக்கடன்களை மேற்கொள்ளும் அடியார்கள் 30.05.2025 வெள்ளிக்கிழமை காலை 7.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை மேற்கொள்ளலாம்.
- வெளிமடை உற்சவத்தை முன்னிட்டு கடைகள் அமைக்க விரும்புவோர் 28.05.2025 புதன்கிழமை ஆலய தருமபரிபாலன சபை அலுவலகத்தில் காலை 9.00 முதல் தங்களது பதிவினை மேற்கொள்வதுடன் தங்களுக்கான இடத்தினை ஒதுக்கிப் பெற்றுக்கொள்ளலாம்.
- 31.05.2025 சனிக்கிழமை காலை வெளிமடைப்பூசை நிறைவடைந்ததை தொடர்ந்து ஆடு, கோழி ஏலவிற்பனை இடம்பெறும்.

அருள்மிகு தும்பளை முத்துமாரி அம்மன் கோவில் வேள்வி உற்சவம் 06.06.2025 வெள்ளிக்கிழமை விளக்கு வைத்து 13.06.2025 வெள்ளிக்கிழமை வேள்வி நடைபெறும். இடைப்பொங்கல் 16.06.2025 திங்கட்கிழமை நடைபெறும்.

அலுவலக தொ.பே.இல 021 205 6060

தும்பளை நெல்லண்டை அம்மன் கோவில் தரும பரியாலனசபை

(சி-3014)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

## சீனாவில்
## 650 வருட பழமையான கோபுரத்தின் கூரை இடிந்து விழுந்து விபத்து



(பீஜிங்)


சீனாவின் அன்ஹுய் மாகாணத்தில் உள்ள 650 ஆண்டுகள் பழமையான ஃபெங்யாங் டிரம் கோபுரத்தின் கூரை இடிந்து விழுந்து விபத்து ஏற்பட்டது.

கோபுரத்தின் கூரை இடிந்து விழுந்த சமயத்தில் அங்கிருந்த சுற்றுலாப் பயணிகள் அலறியடித்து ஓட்டம் பிடித்தனர்.

இந்த விபத்தில் யாருக்கும் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை.

கோபுரத்தின் கூரை இடிந்து விழுந்த வீடியோ இணையத்தில் வெளியாகி வைரலாகியுள்ளது.

1375 ஆம் ஆண்டில் மிங் வம்சத்தின் போது இந்த கோபுரம் கட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-8)



## உலக நாடுகளின் அ
## ஒருபோதும் அடிப
## இஸ்ரேல் திட்ட

(ஜெருசலேம்)


**காசா மீதான தாக்குதலுக்கு எதிரா நாடுகளில் இருந்து வரும் புற அழுத்தத்திற்கு நாடு ஒருபோதும் அடிபணியாது என இ திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.**

பாலஸ்தீனத்தின் காசா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் அமைப்பினர் மீது இஸ்ரேல் போர் தொடுத்தது. ஒரு ஆண்டுக்கு மேலாக போர் நீடித்த நிலையில் உலக நாடுகளின் தலையீட்டால் கடந்த ஜனவரி மாதம் முதற்கட்ட போர் நிறுத்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

இதில் இரு தரப்பிலும் பணயக்கைதிகள் விடுவிக்கப்பட்டனர். ஆனால் 2ஆம் கட்டப் போர் நிறுத்த பேச்சின் போது. இஸ்ரேல் விதித்த நிபந்தனைகளை ஏற்க ஹமாஸ் தரப்பு மறுத்தது. இதனால் காசா மீது இஸ்ரேல் மீண்டும் தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்நிலையில் நட்பு நாடுகளில் இருந்தும் இஸ்ரேலுக்கு எதிர்ப்பு கிளம்பியது. கனடா, பிரான்ஸ், இங்கிலாந்து ஆகிய

## காசாவில் 14,000 குழந்தைகள் உயிரிழக்க நேரிடலாம்
## ஐ.நா எச்சரிக்கை



(ஜெனீவா)

காசாவில் மனிதாபிமான உதவிகள் போதிய அளவில் வழங்கப்படாவிட்டால், அடுத்த 48 மணி நேரத்தில் 14,000 குழந்தைகள் உயிரிழக்க நேரிடலாம் என ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமானத் தலைவர் டாம் ஃபிளெட்சர் எச்சரித்துள்ளார்.

பிரபல சர்வதேச ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது காசா மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் உணவுப்பொருட்கள் முறையாக அவர்களை வந்தடைவதில்லை எனவும், அவ்வாறு கிடைக்கும் உதவிகள் மூலம் காசா மக்களின் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாது.

அத்துடன் காசாவிலுள்ள தாய்மார்கள் தங்கள் குழந்தைகளை உணவளிக்க முடியாமல் தவிக்கிறார்கள் இதனால் அடுத்த 48 மணி நேரத்தில் 14,000 குழந்தைகள் உயிரிழக்கும் அபாயத்தில் உள்ளனர்.

இந்த பேரழிவைத் தவிர்க்க, உடனடி மற்றும் அதிகளவிலான மனிதாபிமான உதவிகள் அவசியம் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், காசாவில் உள்ள பல மருத்துவமனை மருத்துவ வசதிகள் இன்றி செயலிழந்து காணப்படுவதாக தெரிவித்த அவர் உணவு, மின்சாரம் மற்றும் சுகாதார வசதிகள் போதிய அளவில் இல்லாத காரணத்தினால் மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர் எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை காசா மீது மேற்கொண்டு வரும் இராணுவத் தாக்குதலை நிறுத்தாவிட்டால் இஸ்ரேல் மீது பொருளாதார தடைவிதிக்கப்படும் என பிரித்தானியா, கனடா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளின் தலைவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழுத்தங்களிற்கு பணிய மாட்டோம்!

## வட்டம்




...ரோக பிற ...ங்கு தங்கள் இஸ்ரேல்

நாடுகள் நேற்று கூட்டாக அறிக்கை வெளியிட்டு, நெதன்யாகுவின் திட்டத்திற்கும், காசாவுக்குள் கடந்த 11 வாரங்களாக உணவு மற்றும் உதவிப் பொருட்கள் செல்லவிடாமல் செய்ததற்கும் கடும் கண்டனம் தெரிவித்தன.

மேலும், இஸ்ரேலுடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்த பேச்சுவார்த்தையை ரத்து செய்வதாக இங்கிலாந்து அறிவித்தமை சுட்டிக்காட்டத்தக்கது. (நி)

# குத்துச்சண்டை போட்டிக்கு தயாராகும் ரோபோக்கள்




(பீஜிங்)

ரோபோக்களுக்கு இடையிலான குத்துச்சண்டை போட்டி மே 25 ஆம் திகதி சீனாவின் ஹாங்சூ நகரில் நடைபெறவுள்ளது.

குத்துச்சண்டை போட்டிக்காக தீவிர பயிற்சியில் மனித ரோபோக்கள் ஈடுபட்டு வருகின்றன.

இந்நிலையில், பயிற்சியில் ஈடுபடும் மனித ரோபோக்களின் வீடியோக்கள் இணையத்தில் வெளியாகி நெட்டிசன்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. (நி-8)



# ரஷ்யாவை நம்ப தயாராக இல்லை

## ஜெலன்ஸ்கி அதிரடி



(கீவ்)

ரஷ்யா போர்நிறுத்தம் மட்டுமின்றி வேறு சில கொள்கைகளையும் விரும்புவதாக உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுடன் இரண்டு மணி நேரம் தொலைபேசியில் உரையாடியதாக தெரிவித்தார்.

இதில், போர்நிறுத்தப் பேச்சுவார்த்தைகள் விரைவில் தொடங்கும் என்றும், அதன் பின்னர் இரு நாடுகளுக்கும் இடையே பாரிய அளவிலான வர்த்தகம் நடைபெற விரும்புவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தநிலையில், உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலன்ஸ்கி ரஷ்யாவை நம்ப தயாராக இல்லை என குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பாக மேலும் தெரிவித்த அவர், ரஷ்ய தரப்பு கொள்கைகளை பற்றி எனக்கு தெரியாது.

ட்ரம்புடனான எங்களுடைய பேச்சுவார்த்தையின் வழியே நான் புரிந்துகொண்ட விடயம் என்னவென்றால், ரஷ்ய தரப்பு எங்களுக்கு குறிப்பு ஒன்றை அனுப்ப விரும்புகிறது என தெரிகிறது.

போர்நிறுத்தம் மட்டுமின்றி அவர்கள் வேறு சில கொள்கைகளையும் விரும்புகிறார்கள், போர் நிறுத்தத்திற்கு ஒவ்வொருவரும் அதிக ஆர்வத்துடன் உள்ளனர்.

நிறைய இழப்புகள் ஏற்பட்டுவிட்டன, உண்மையில் போர் முடிவுக்கு வரவேண்டும் என நான் விரும்புகிறேன்.

அதற்கு ரஷ்யா தயாராக உள்ளதா ? என எனக்கு உறுதியாக தெரியவில்லை.

நாங்கள் அவர்களை நம்பத் தயாராக இல்லை, முதல் நடவடிக்கையாக போர்நிறுத்தம் வேண்டும், உண்மையில் போரை நிறுத்த தயாராக இருக்கிறார்கள் என அவர்கள் காட்ட வேண்டும்.

அதன் பின்னரே கைதிகள் பரிமாற்றம் உள்ளிட்ட மற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

அத்தோடு, ரஷ்யாவுடன் இதற்காக நேரடி பேச்சுவார்த்தை நடத்த தயாராக இருப்பதாகவும், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் தலைவர்களுடன் தொடர்ந்து தொடர்பில் இருப்பது பற்றியும் அவர் சுட்டிக்காட்டியமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரிய வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பு விரைவில்

## உறுதிபடத் தெரிவித்தார் பிரதமர்



(கொழும்பு)

இந்த ஆண்டு நிறைவடைவதற்குள் ஆசிரியர் வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பு பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படும் என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற பாராளுமன்ற அமர்வில் உரையாற்றும் போதே பிரதமர் இதனைக் குறிப்பிட்டார்.

சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் தரம் 1 முதல் 11 வரையிலான வகுப்புகளுக்கும் ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுவதாகப் பிரதமர் விளக்கமளித்தார். (நி)

# சுகாதார நிபுணர்களின் வெளியேற்றம்; கவலை வெளியிட்ட அமைச்சர்

(கொழும்பு)

ஜெனீவாவில் நடந்த உலக சுகாதார சபையில் உரையாற்றிய இலங்கையின் சுகாதார அமைச்சர் கலாநிதி நளிந்த ஜெயதிஸ்ஸ, சுகாதார நிபுணர்களின் வெளியேற்றம் குறித்து கவலை தெரிவித்தார்.

இது நாட்டின் சுகாதார அமைப்பு மற்றும் பொருளாதாரத்தில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தும் என்று அவர் குறிப்பிட்டார்.

2022 மற்றும் 2025இற்கும் இடையில், ஆயிரக்கணக்கான சுகாதார வல்லுநர்கள் இலங்கையை விட்டு வெளியேறியுள்ளனர்.

இது நாட்டின் சுகாதார அமைப்புக்கு கடுமையான அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளது.

726 ஆலோசகர்கள், 1116 மருத்துவ அதிகாரிகள் மற்றும் கிட்டத்தட்ட 2800 செவிலியர் அதிகாரிகள் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர்.

எனவே, சர்வதேச சுகாதாரப் பணியாளர் ஆட்சேர்ப்பு குறித்த உலக சுகாதார அமைப்பு உலகளாவிய நடைமுறை விதிகளை திறம்பட செயற்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தினார். (நி-8)

## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி
### இறைச்சிக் கடைகளை 2025.06.01 - 2025.12.31 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான ஏலக்கேள்வி அறிவித்தல்

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட கீழ்வரும் இறைச்சிக் கடைகளை 2025.06.01 - 2025.12.31 வரையான காலப்பகுதிக்கு ஏலக்கேள்வி விடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஏலக்கேள்வி 2024.11.09 திகதிய வலம்புரி மற்றும் யாழ் தினக்குரல் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக கோரப்பட்டுள்ளது.

ஏலக் கேள்வி 2025.05.29 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு நடைபெறும்.

ஏலத்தில் பங்குபற்ற விரும்புபவர்கள் தலைமை அலுவலகத்தில் கேள்வி வைப்புப்பணத்தினை செலுத்தி பற்றுச் சீட்டினை 2025.05.29 ஆம் திகதி காலை 9.30 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

இவ் ஏலக்கேள்வியில் கலந்து கொள்பவர்கள் மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணத்தினை 2025.05.29 ஆம் திகதி காலை 9.30 முன் செலுத்துவதுடன், சித்திகர கேள்விதாரர் உடனடியாக ஏலக்கேள்வியில் ஏலத்தொகையின் 1/3 பங்கை பாதுகாப்பு வைப்பு பணத்தினை செலுத்தி ஒப்பந்தம் செய்ய வேண்டும். பாதுகாப்பு வைப்புப்பணம் உடனடியாக செலுத்தத்தவறும் பட்சத்தில் அடுத்த கேள்விதாரருக்கு வழங்கப்படும்.

| தொ.இல. | விபரம் | ஆகக்குறைந்த ஏலக்கேள்வி தொகை | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் (1%) |
|---|---|---|---|
| 01 | நெல்லியடி சந்தை கோழி இறைச்சிக் கடை | ரூபா. 320,650.00 | ரூபா. 3,250.00 |
| 02 | நவிண்டில் சந்தை கோழி இறைச்சிக் கடை | ரூபா. 41,115.00 | ரூபா. 420.00 |
| 03 | துன்னாலை வடக்கு ஆட்டிறைச்சிக் கடை | ரூபா. 27,560.00 | ரூபா. 280.00 |

**கணேசன் கம்ஸநாதன்,**
செயலாளர்,
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை, கரவெட்டி.

(சி-3016)

# பிரதிஸ்டா சிரோன்மணி
## கலாநிதி சாமி விஸ்வநாதக்குருக்கள்

மறைந்தார் மாண்பு



கலாநிதி விஸ்வநாதக்குருக்கள் அவர்களின் நூறாவது ஜனன தினத்தை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது

இந்து சமுத்திரத்தில் குபேர புரியாக விளங்குவது இலங்கைத் திருநாடு. அந்நாட்டின் வடபாலமைந்த வீணாகானபுரம் என்றழைக்கப்படும் யாழ்ப்பாணத்தில் மேற்கே அமைந்த நாவலி, பாவலி, வேதஒலி முழங்குவதும் நவஆலயங்கள் அமையப்பெற்றது. நவாலிக்கிராமம், அக்கிராமத்தின் வடபால் அமைந்த அட்டகிரி எனும் பகுதியில் முக்காலமும் கந்தப்பெருமான் திருமேனி தீண்டி அபிஷேகித்து, அர்ச்சித்து, அலங்கரித்து, பக்திபூர்வமாக வணங்கி வந்த அந்தணப் பெரியார் சீதாபரிக்குருக்கள் சாமிக் குருக்களுக்கும் சண்டிலிப்பாய் ஐயாத்துரைக் குருக்கள் மகேஸ்வரி அம்மாளுக்கும் அவர்கள் தவப்பயனின் பேறாக நாகரத்தின அம்மா எனும் மகளையும் விஸ்வநாதசர்மா எனும் மகனையும் பெற்றார்கள்.

1925-05-14ஆம் திகதி திருவோண நட்சத்திரம் கூடிய நாளில் பூமியில் பிறந்த மகனுக்கு விஸ்வநாதசர்மா எனப் பெயரிட்டு எவ்வித குறையும் விடாது வளர்த்து வந்தனர். தம்பிள்ளை கல்வி கேள்விகளில் சிறந்து விளங்க வேண்டும் எனும் எண்ணத்தில் வடமொழியையும் தமிழ்மொழியையும் கற்றுத் தேர்ந்த பாண்டித்தியமிக்கவர்களிடம் அனுப்பிக் கற்க வழிசெய்தனர்.

பெற்றோரின் வழிகாட்டலில் குருக்களும் நவாலி சோமசுந்தரப்புலவர், பண்டிதமணி, சி.கணபதிப்பிள்ளை, மகாலிங்கசிவம் போன்ற அறிஞர்களிடம் தமிழ்மொழியைக் கசடறக் கற்று அவ்வாசிரியர்களின் அன்புக்குப் பாத்திரமானார். வடமொழிக் கல்வியை ஆரம்பத்தில் நீர்வேலி பண்டிதர் கந்தையா அவர்களிடமும் வடலியடைப்பு அருணாசல தேசிகர், சோமசுந்தரக்குருக்கள், கந்தர்மடம் சீதாராமசாஸ்திரிகள் போன்ற வடமொழி விற்பன்னர்களிடமும் உரியமுறையில் கற்றுவந்தார். பாடங்களில் இவர் காட்டிய ஆர்வத்தையும் கிரகிக்கும் தன்மையையும் கண்ட ஆசிரியர்கள் இவர்பால் அன்பு பூண்டு பல கலைகளையும் விரும்பிக் கற்பித்தனர்.

பதினோராவது வயதில் உபநயனத்தைப் பெற்றோர் பெருவிழாவாக நடத்தி உவகையுற்றனர் மகனை இல்லற வாழ்வில் ஈடுபடுத்த விரும்பிய பெற்றோர் கொழும்பு கொச்சிக்கடை பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்தில் பிரதம குருவாகவும் ஸ்தானிகராக விளங்கிய சுழிபுரம் பறாளாய் வேதாரண்யேஸ்வரக் குருக்கள் அவர்களின் திருமகளாம் வாலாம்பிகை அம்மாளை இந்திய வைதீக முறைப்படி திருமணம் செய்வித்தனர்.

இவரது மைத்துனரான பிரம்மஸ்ரீ இராமசாமிக் குருக்களால் அவரது இருபத்திரண்டாவது வயதில் ஆச்சார்ய அபிஷேகம் செய்யப்பட்டு சிவாச்சாரிய பதவியைப் பெற்றார். வண்ணை வெங்கடேஸ்வரப் பெருமாள் கோயிலின் பொறுப்பையும் பெற்று நித்திய, நைமித்திய உற்சவங்களை சிறப்புற நடத்தினார்.

1972ஆம் ஆண்டு நவாலி சிந்தாமணி விநாயகப் பெருமானின் கும்பாபிஷேகத்தை அவர் நிகழ்த்தியதையே அடியேன் முதன்முதலாகக் கண்ணுற்றேன். அப்போது எனக்கு வயது எட்டு அவர் நிகழ்த்திய கும்பாபிஷேகத்தின் பலனாய் கும்பாபிஷேகம் நிறைவடைந்த சிலமணிநேரத்தின் பின் பெருமழை கொட்டித் தீர்த்தது அந்நினைவு இப்பொழுதும் என் கண்முன்னே நிழலாடுகின்றது.

அறிவின் ஒளி அன்பின் அணைப்பு எம்போன்ற குழந்தைகளை அணைக்கும் தன்மை வேத மந்திரங்களை ஓதும்போது குரலின் அட்சர சுத்தம் என்னவென்று சொல்வது.

அவரது இல்லறத்தின் பயனாய் மூன்று பெண்களையும் இரு குமாரர்களையும் பெற்று அவர்களுக்கு நல்ல வழிகாட்டியாய் விளங்கினார். எமது குருக்களையா பல ஆலயங்களில் கும்பாபிஷேகக் கிரியைகளைத் திறம்பட நடாத்திவைத்தார். 1984இல் நவாலி அட்டகிரி முருகனுக்கு குடமுழுக்காற்றிய பின் சில மணி நேரங்களில் வான் மழை சொரிந்தது. நாம் அவற்றை ஆச்சரியத்துடன் பார்த்து வியந்தோம்.

ஐயா அவர்களின் ஷஷ்டியப்த பூர்த்தி விழா மிகச் சிறப்பாக அவரது இல்லத்தில் நடைபெற்றது. அவ்வேளை அவரது குரு சீதாராம சாஸ்திரிகளுக்கு பாத பூஜை செய்த விதம் இன்றைய குருமார்களில் சிலர் அறிந்திருப்பர். ஆகமவிதிப்படி பூஜைகள் சிறப்புற ஆற்றியவர் எங்கள் குருக்கள் ஐயா. இலங்கையின் பல பாகங்களிலும் ஐரோப்பிய நாடுகள் கனடா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா, சிங்கப்பூர், மலேசியா போன்ற பல நாடுகளில் சிறப்புற ஆற்றியவர்.

1992 ஆம் வருடம் கொழும்பு மாணிக்கப் பிள்ளையார் ஆலயக் கும்பாபிஷேகத்தை தலைமை தாங்கி நிகழ்த்திய வேளை அவ்விடம் இந்திரலோகம் போலவே காட்சியளித்தது. கும்பாபிஷேகத்தினை சிறப்புற நிகழ்த்திய பின் அவருடன் உரையாடியபோது ஐயா தாங்கள் தலைமையில் நிகழ்த்தப்படும் இக்கும்பாபிஷேகம் எத்தனையாவது கும்பாபிஷேகம் என்று கேட்டேன் அதற்கு ஐயா அவர்கள் இது ஆயிரமாவது கும்பாபிஷேகம் எனக் கூறினார்.

2002 ஆம் வருடம் சித்திரைச் சதயம் அன்று அவரது இஷ்ட தெய்வமான நவாலி ஸ்ரீ சிந்தாமணி விநாயகருக்கு கும்பாபிஷேகம் இடம்பெற்றது. அவரது முதுமை காரணமாக ஸ்தூபி அபிஷேகம் செய்வதற்கு நவாலியூரைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ சோ.கௌரீஸ்வரக் குருக்களைக் குருக்கள் ஐயாவே நியமித்திருந்தார். பிரதான கும்பம் வீதி எழுந்தருளி ஸ்தூபி அபிஷேகம் செய்வதற்காக கும்பம் மேலே எடுத்துச் செய்யப்படுகின்ற வேளை குருக்கள் ஐயாவும் ஸ்தூபியில் தானாகவே ஏறி ஸ்தூபி அபிஷேகத்தை சிறப்புற நடாத்தினார்.

இது எமது குருக்கள் ஐயாவினால் நிகழ்த்தப்பட்ட கடைசிக் கும்பாபிஷேகம். கும்பாபிஷேக கிரியைகள் நிறைவடைந்ததைத் தொடர்ந்து நான் குளிர்வடைந்தேன் என இறைவன் கூறுவது போல வானத்திலிருந்து மழை பொழிந்தது. கடந்த 14.05.2025 அவரது நூறாவது பிறந்ததினம். அவர் வாழ்ந்த காலத்தில் நாமும் வாழ்ந்திருக்கின்றோம்.

**முத்தமிழ் மணி - ஜெ.கோக்கலே**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத மீன்பிடி
## 5 படகுகளுடன் அறுவர் கைது

(வவுனியா)

கொக்குதொடுவாய் கடற்கரை பகுதியில் சட்டவிரோதமான முறையில் சுருக்கு வலை தொழிலில் ஈடுபட்டிருந்த ஐந்து மீன்பிடி படகு, இரண்டு சுருக்குவலைகளுடன் ஆறு பேர் கைது செய்யப்பட்ட சம்பவம் ஒன்று நேற்றைய தினம் இடம் பெற்றுள்ளது.

முல்லைத்தீவு கொக்கு தொடுவாய் கடற்கரை பகுதியில் சட்டவிரோத மீன்பிடித் தொழில் இடம்பெறுவதாக கடற்றொழில் திணைக்களத்தினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து குறித்த இடத்திற்கு சென்ற கடற்றொழில் திணைக்களத்தினர், கடற்படையினர் சட்டவிரோத தொழிலில் ஈடுபட்டிருந்த ஐந்து மீன்பிடி படகுகளையும், இரண்டு தடை செய்யப்பட்ட சுருக்கு வலைகளுடன் ஆறு பேரைக் கைது செய்தனர்.

குறித்த சட்டவிரோத மீன்பிடிக்கு வெளிச்சத்தை பாய்ச்சிய படகுகள் பற்றிய விசாரணைகளை கடற்றொழில் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது. அத்தோடு கைது செய்யப்பட்ட ஆறுநபர்களும் முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர்.

புத்தள மாவட்டத்தைச் சேர்ந்த ஐந்து நபர்களும் கொக்கு தொடுவாய் பகுதியைச் சேர்ந்த ஒருவருமாக ஆறுபேர் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-299)

# மாணவியின் உயிரிழப்புக்கு
## பொலிஸாரின் அசமந்தப் போக்கே காரணம்
### ரவிகரன் எம்.பி கண்டனம்



(வவுனியா)

முல்லைத்தீவு - கொக்கிளாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கருநாட்டுக்கேணிப் பகுதியில், நேற்று பாடசாலைக்கு அண்மையில் இடம்பெற்ற விபத்தில் மாணவியொருவர் உயிரிழந்துள்ள நிலையில், குறித்த விபத்து இடம்பெறுவதற்கு பொலிஸாரின் அசமந்த போக்கே காரணமென வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கடுமையாகச் சாடியுள்ளதுடன், உயிரிழந்த மாணவிக்கு நீதி கிடைக்க வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளார்.

குறிப்பாக வீதிப்போக்குவரத்துப் பொலிஸார் பாடசாலைக்கு மாணவர்கள் செல்லும் நேரத்தில் உரியநேரத்திற்கு கடமைக்கு வராமை மற்றும், அதிவேகத்துடன் செல்லும் வாகனங்களின் வேகக்கட்டுப்பாடு குறித்து பொலிஸார் கவனம் செலுத்தாமையே இந்த விபத்து இடம்பெற காரணமாக அமைந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாடசாலைக்காக மாணவர்கள் செல்கின்ற காலை வேளையில் இந்தச் சம்பவம் பாடசாலைக்கு அண்மித்த பகுதியில் இடம்பெற்றுள்ளது. இருப்பினும் இந்தப் பகுதியில் வீதிப் போக்குவரத்துப் பொலிஸார் எவரும் குறித்த நேரத்தில் கடமையில் ஈடுபட்டிருக்கவில்லை.

கொக்கிளாய் மற்றும், கருநாட்டுக்கேணிப் பகுதியிலிருந்து செல்கின்ற வாகனங்கள் எப்போதும் வேகக் கட்டுப்பாடின்றி மிக வேகமாகச் செல்வதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த விடயத்தில் பொலிஸாரின் அசமந்தப்போக்கான செயற்பாடு தொடர்பிலும், உயிரிழந்த சிறுமிக்கு நீதி கிடைக்கவும் உரியதரப்பினரின் கவனத்திற்கு கொண்டு செல்வேன் எனவும் அவர் தெரிவித்தார். (8-299)

# மன்னாரில் காணி அனுமதிப்பத்திரம்
## வழங்கி வைப்பு



(மன்னார்)

மன்னார் நகர பிரதேச செயலகப் பிரிவில் உள்ள திருக்கேதீஸ்வர கிராம அலுவலர் பிரிவை சேர்ந்த மாந்தை கிராமத்தில் வசிக்கும் 27 குடும்பங்களுக்கு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காணி அனுமதி பத்திரம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் பிரதேச செயலாளர் மனோகரன் பிரதீப் தலைமையில் மாந்தையில் இடம்பெற்ற குறித்த காணி அனுமதிப்பத்திரம் வழங்கும் நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன், மேலதிக மாவட்ட செயலாளர் (காணி) தமா. சிறிஸ்கந்தராஜா மற்றும் பிரதேச செயலக காணி உத்தியோகத்தர், குடியேற்ற உத்தியோகத்தர் கிராம மட்ட அலுவலர்கள் ஆகியோரும் கலந்து சிறப்பித்ததுடன் பொது மக்களுக்கு காணி அனுமதி பத்திரங்களையும் வழங்கி வைத்தனர்.

குறித்த 27 குடும்பங்களுக்கு காணி அனுமதிப்பத்திரங்கள் நீண்ட காலமாக வழங்கப்படாமல் இருந்த நிலையில், அரச சட்ட திட்டங்களுக்கு அமைவாக வழங்கிவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (8-285)



கிளிநொச்சி மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் தலைமையில் வீதி பாதுகாப்பு தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. (படம்: தேவானந்தா)

# கிளிநொச்சி மாவட்டத்தில் ஆறு வேலைத்திட்டங்கள்
## 37.5 மில்லியன் ஒதுக்கீடு

(தருமபுரம்)

உலக உணவுத் திட்டமும் சமூக அபிவிருத்தி மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு ஆகியன இணைந்து கிளிநொச்சி மாவட்டத்தில் ஆறு வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றன.

37.5மில்லியன் ரூபாய் செலவில் மாவட்டத்தில் கண்டாவளை பிரதேச செயலகத்தில் இரண்டு திட்டங்களும் கரைச்சி பிரதேச செயலகத்தில் நான்கு திட்டங்களாக மொத்தமாக ஆறு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

இவ் வேலைத்திட்டத்தின் அங்கமாக கண்டாவளை பிரதேச செயலகத்தின் பிரமந்தனாறு கிராமத்தில் கழிவுநீர் வாய்க்கால் துப்பரவு திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்வு பிரமந்தனாறு கிராமத்தில் கண்டாவளை பிரதேச செயலாளர் தங்கவேலாயுதம் பிருந்தாகரன் தலைமையில் நடைபெற்றது. குறித்த நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) நளாயினி இன்பராஜ், உலக உணவுத்திட்டத்தின் இலங்கைக்கான திட்ட பொறியியலாளர் சந்திர திலக உள்ளிட்டோர் கலந்து கொண்டு குறித்த திட்டத்தினை ஆரம்பித்து வைத்தனர்.

குறித்த நிகழ்வில் திணைக்கள உத்தியோகத்தர்கள், பிரதேச மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

90 பயனாளிகளை உள்ளடக்கியதாக மனிதவலு வினைக்கொண்டு குறித்த 6 வேலைத்திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. இவ் வேலைத்திட்டம் மூலம் கிராமத்தின் கழிவு வாய்க்கால், குளங்கள் என்பன துப்பரவு மற்றும் புனரமைப்பு செய்வதன் ஊடாக விவசாயம் முன்னேற்றமடைவதுடன் பயனாளிகளான குறித்த கிராம மக்களுக்கு குறித்த வேலைக்கான வருமானத்தினையும் பெற்றுக் கொள்ளமுடியும். (8-316)

# சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய
## குளிர்பான நிலையத்திற்கு 50,000 ரூபா தண்டம்

(வவுனியா)

முழங்காவில் பகுதியில் அமைந்துள்ள குளிர்பான நிலையத்திற்கு எதிராக கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றினால் 50,000 ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்ட சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி முழங்காவில் பகுதியில் அமைந்துள்ள குளிர்பான நிலையம் மீது கடந்த வாரம் திடீர் பரிசோதனை ஒன்று கிளிநொச்சி மாவட்ட சுகாதார பரிசோதகர்களால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. குறித்த சோதனை நடவடிக்கையின் போது குளிர்பான நிலையம் சுகாதார சீர்கேடுகளுடன் இயங்கி வருவது கண்டறியப்பட்டு குறித்த குளிர்பான விற்பனை நிலையத்திற்கு எதிராக கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

குளிர்பான நிலையத்திற்கு எதிராக குளிர்பானம் தயாரிக்கும் பகுதி யன்னல், கதவு இலையான், கொறியுயிர்கள், விலங்குகள் உட்செல்லக்கூடிய வாறு திறந்த நிலையில் காணப்பட்டமை, குளிர்பானம் தயாரிக்கும் பகுதியில் சுவர், தரை அழுக்காக காணப்பட்டமை, உணவு இலையானால் மாசடையும் வகையில் திறந்த நிலையில் விற்பனை செய்தமை, சுற்றுச்சூழலில் கழிவு நீர் தேங்கி இலையான் பெருகக்கூடியவாறு காணப்பட்டமை, குப்பைத்தொட்டியானது மூடி இல்லாமல் காணப்பட்டமை, உணவு கையாளும் நிலையத்தின் கழிவு நீரினை ஒழுங்கு முறையில் அகற்றாது உணவு மாசடையும் வகையில் திறந்த வெளியில் அகற்றியமை, உடல் நலத்தகுதியை உறுதிப்படுத்தும் மருத்துவச்சான்றிதழ் இன்றி உணவை கையாண்டமை, உணவு தயாரிப்பில் ஈடுபடுபவர்கள் ஏப்ரன் தொப்பி, கையுறை அணியாது உணவு தயாரிப்பில் ஈடுபட்டமை, சுகாதாரமற்ற அழுக்கான றெஜிபோம் பெட்டிக்குள் உணவுப் பொருட்கள் களஞ்சியபடுத்தப்பட்டு காணப்பட்டமை, உணவு (சுட்டுதுண்டிடலும் விளம்பரப்படுத்தலும்) ஒழுங்குவிதிக்கு முரணான வகையில் சுட்டுத்துண்டிடாமல் உணவினை



பொதி செய்தமை ஆகிய குற்றச்சாட்டுகள் முன்வைத்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

குளிர்பான நிலையத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கானது நேற்று முன்தினம் கிளிநொச்சி நீதவான் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட போது குளிர்பான நிலைய உரிமையாளருக்கு 50,000 ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்பட்டிருந்தது.

குறித்த சோதனை நடவடிக்கையானது கிளிநொச்சி மாவட்ட மேற்பார்வைப் பொது சுகாதார பரிசோதகர் றெனால்ட் தலைமையில் முழங்காவில் பொது சுகாதார பரிசோதகர் இ. தர்மிகன் இணைந்து குறித்த நடவடிக்கையினை மேற்கொண்டிருந்தார்கள். (8-299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 779





மிச்சம் பாதி உடம்பு உள்ளே புகுந்து பிரயாசையாயிருந்தது. கைகளினால் தாவிப் பிடித்துக் கொள்ள ஒன்றும் அகப்படவில்லை. இச்சமயத்தில் உள்ளேயிருந்த தீபம் அணைந்து இருள் சூழ்ந்தது.

வந்தியத்தேவன் அபயம் கேட்கும் குரலில், "சந்திரமதி! சந்திரமதி! என்னைக் காப்பாற்று!" என்றான். கலகலவென்று சிரிக்கும் பெண்ணின் குரல் கேட்டது.

"சந்திரமதி! நீ இங்கே இருந்து கொண்டுதானா வேடிக்கை பார்க்கிறாய்? இது நன்றாயிருக்கிறதா?"

அதற்கு பதிலாக மறுபடியும் சிரிப்பு அதைத் தொடர்ந்து "நீ இப்படி அந்தப்புரத்தில் திருட்டுத்தனமாக நுழைவது மட்டும் நன்றாயிருக்கிறதா?" என்று ஒரு பெண்ணின் குரல் கேட்டது.

அது மணிமேகலையின் குரல் என்று வந்தியத்தேவன் தெரிந்து கொண்டான். ஆயினும் வேண்டுமென்றே "சந்திரமதி! நீ வரச் சொன்னதினால்தானே வந்தேன்! பின்னால் ஆட்கள் வருகிறார்கள் சீக்கிரம் என்னை எடுத்து விடு இல்லாவிட்டால் விபரீதம் வரும்!" என்றான். "சந்திரமதி இவ்வளவு கெட்டிக்காரியா? இருக்கட்டும் உனக்கும் அவளுக்கும் சேர்த்துப் புத்தி கற்பிக்கிறேன்!"

"ஓஹோ! தாங்கள் இளவரசி மணிமேகலையா? அம்மணி! இந்த ஒரு தடவை மட்டும் என்னை மன்னித்துக் காப்பாற்றி விடுங்கள்! இனிமேல் இம்மாதிரி தப்புக் காரியம் செய்ய மாட்டேன்! உங்களுக்குக் கோடி புண்ணியம் உண்டு!" என்று கெஞ்சினான் வந்தியத்தேவன்.

இருளில் இரு மெல்லிய கரங்கள் வந்தியத்தேவனுடைய தோள்களைப் பிடித்துத் தாங்கி மெல்லக் கீழே தரையில் இறக்கிவிட்டன. சுவரில் தோன்றிய துவாரம் மூடிக் கொண்டது. "இளவரசி! உங்களுக்கு அனந்த கோடி வந்தனம்!" என்றான். "கொஞ்சம் பொறு! நான் உன்னை என்ன செய்யப் போகிறேன் என்று தெரிந்து கொண்டு வந்தனம் செலுத்து!"

"தாங்கள் என்னை என்ன செய்தாலும் சரிதான்! கொலைக்காரர்களிடமிருந்து என்னைத் தப்புவித்தீர்களே! அதுவே போதும்! அந்த அரக்கர் கைகளினால் சாவதைக் காட்டிலும் தங்களுடைய மணிக்கரத்தினால் சாகும்படி நேர்ந்தால் அது என்னுடைய பாக்கியம்தான்!

"அடே அப்பா! பெரிய வீராதி வீரனாயிருக்கிறாயே? அப்படி உன்னைத் தேடி வரும் கொலைக்காரர்கள் யார்? கொஞ்சம் பொறு முதலில் விளக்கு ஏற்றி உன் முகம் எப்படியிருக்கிறது என்று பார்க்கிறேன்!"

"அம்மணி! என் முகத்தை மறுபடியும் பார்க்க வேண்டுமா? தாங்கள் கண்ணாடியில் பார்த்துக் கொண்ட போது பின்னால் நின்று பார்த்த குரங்கு முகந்தான் என் முகம்! சந்திரமதி வர்ணித்தாளே?" என்றான் வந்தியத்தேவன்.


இருட்டில் சிரிப்பின் ஒலியும், கை வளையல்கள் குலுங்கும் ஓசையும் கேட்டன. வந்தியத்தேவன் அந்த அறைக்குள் தலையை நீட்டிய போது அந்த அறையில் எரிந்து கொண்டிருந்த விளக்கை மணிமேகலை மூடிவிட்டாள். அதனால் இருட்டாயிற்று இப்போது அதன் மூடியை அகற்றியதும் தீபம் சுடர் விட்டு ஒளிர்ந்தது. அதன் ஒளியில் வந்தியத்தேவனுடைய முகத்தைப் பார்த்த வண்ணம் மணிமேகலை மெய்மறந்து நின்றாள்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## முட்டாள் வேலைக்காரன்



ஓர் ஊரில், வணிகன் ஒருவன் இருந்தான், பணக்காரனான அவன் சரியான கஞ்சன். எனவே, முட்டாளான ஒருவனை வேலைக்காரனாக வைத்திருந்தான். வணிகன்.

ஒருநாள் அவனை அழைத்து, "நம் வண்டியை எடுத்துக் கொண்டு பனங்காட்டுக்குப் போ. அங்கே பலர் பனை மரங்களை வெட்டி வண்டியில் ஏற்றிக் கொண்டு இருப்பர். அதே போல் நீயும் மரங்களை வெட்டிக்கொண்டு வா!" என்றான்.

அப்படியே அவனும் வண்டியை ஓட்டிக்கொண்டு சென்றான். அங்கே சிலர் மரங்களை வெட்டி வீழ்த்திக் கொண்டு இருந்தனர்.சிலர் கீழே கிடக்கும் மரங்களை முயன்று வண்டியில் தூக்கிப் போட்டுக் கொண்டிருந்தனர்.

இதைப் பார்த்ததும் வேலைக்காரனால் சிரிப்பை அடக்க முடியவில்லை.

"என்ன இவர்கள் எல்லாரும் முட்டாள்களாக இருக்கின்றனர். மரம் வெட்டும் போதே அதற்குக் கீழாக வண்டியை வைத்தால் மரம் அதில் சரியாக விழும்.

வீணாக ஒரு முறை பூமியில் கிடக்கும் மரத்தை வண்டியில் ஏற்ற வேண்டாமே!"என்று நினைத்தான்.

"என் திட்டத்தை இவர்கள் கண் முன்னாலேயே செய்து காட்டி, நான் எத்தகைய அறிவாளி என்பதைப் புரிய வைப்பேன்" என்ற எண்ணத்தில், தான் வெட்ட வேண்டிய பெரிய மரத்தை தேர்ந்தெடுத்தான்.

கோடாரியால் அந்தப் பனை மரத்தின் அடிப்பகுதியைப் பாதி அளவு வெட்டி முடித்தான்.பிறகு அந்த மரம் விழக்கூடிய இடத்திற்கு நேராக மாட்டுடன் வண்டியை நிறுத்தினான். மரம் வெட்டிக் கொண்டிருந்த மற்றவர்கள், "ஏன் இவன் இப்படிப் பைத்தியக்கார வேலை செய்கிறான்!" என்று நினைத்தனர்.

சிறிது நேரத்தில் அந்த மரம், "சட சட" வென்ற சத்தத்துடன் வண்டியின் மீது வேகமாக விழுந்தது. அவ்வளவுதான், வண்டி தூள் தூளானது.

கால் உடைந்து குற்றுயிரும் குலை உயிருமாக மாடு துடித்துக் கொண்டிருந்தது.

இதைக்கண்டு அவன் திகைத்து விட்டான். தன் திட்டத்தில் என்ன குறை என்று அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை இன்னல்கள் வந்தாலும் சரி சிறந்த சிந்தனை மற்றும் உயர்ந்த எண்ணங்கள் நம்மை எப்போதும் நிலையாக வைத்திருக்க உதவும். - யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அரசாங்கத் தரப்பில் உள்ள தமிழ் எம்.பிக்களுக்கு ஒரு மடல்

அரசாங்கத் தரப்பில் உள்ள தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அன்பு வணக்கம்.

பாராளுமன்றத்திலும் சரி, அதற்கு வெளியிலும் சரி, தமிழ் மக்களின் உரிமைக்காகக் குரல் கொடுப்பது உங்களின் தார்மீகக் கடமை.

எனினும் தமிழ் மக்களுக்கான உங்களின் குரல் போதுமானதாக இல்லை என்பது மக்களின் பொதுவான நிலைப்பாடு.

ஆம், பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியில் நீங்கள் போட்டியிட்டிருந்தாலும் உங்களுக்கு வாக்குகளை வழங்கி உங்களைப் பாராளுமன்றத்துக்கு அனுப்பியவர்கள் தமிழ் மக்கள்.

எனவே உங்களைப் பாராளுமன்றத்துக்கு அனுப்பி வைத்த தமிழ் மக்களுக்காக கதைப்பதுதான் உங்களின் கடமையாக இருக்கும்.

எனினும் ஆளுந்தரப்பின் கட்டுப்பாடுகள்; உங்கள் மீது கடுமையாக விதிக்கப்பட்டுள்ளது போல நீங்கள் மௌனமாக இருக்கிறீர்கள்.

இதற்கு நல்ல உதாரணம், தமிழின அழிப்பில் உயிரிழந்த தமிழ் மக்களின் நினைவாக கனடாவில் அமைக்கப்பட்ட நினைவுத்தூபி தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் கண்டனம் தெரிவித்தபோது, அதற்குப் பதிலளிப்பதாக உங்களின் கருத்துக்கள் வெளிவந்திருக்க வேண்டும்.

அவ்வாறு நீங்கள் உங்களின் கருத்தை முன்வைக்கும்போது, எதிர்காலத்தில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தமிழ் மக்களின் விடயத்தில் எதையும் சிந்தித்து கருத்துரைக்கின்ற நிலைமையை ஏற்படுத்தியிருக்கும்.

ஆனால் அமைச்சர் விஜித ஹேரத்துக்கு உரிய பதிலை நீங்கள் வழங்கத் தவறியமை துரதிர்ஷ்டமே.

பரவாயில்லை. இனிமேலாவது தமிழ் மக்களின் உரிமை தொடர்பில் நீங்கள் உறுதியாக இருக்க வேண்டும் என்பது இக்கடிதத்தினூடு உங்களிடம் நாம் முன்வைக்கின்ற கோரிக்கை யாகும்.

இஃது ஒருபுறமிருக்க, அரச தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் என்றால் அவர்கள் எதையும் உடனடியாகச் செய்து முடிப்பார்கள் என்ற எண்ணப்பாட்டை தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டும்.

எனினும் அத்தகையதொரு களநிலை இன்னமும் உருவாகவில்லை என்றே கூறலாம்.

உதாரணத்துக்கு யாழ்ப்பாணம் பிரதம தபாலகம் அமைந்துள்ள சுற்று வட்டத்தில் இருந்து தீவகத்துக்குச் செல்கின்ற வீதியை ஒரு கணம் அவதானியுங்கள்.

ஒரு சிறிய இடம். இருந்தும் அந்த வீதிப் பகுதி குன்றும் குழியுமாக - மிக மோசமான நிலையில் காணப்படுகிறது.

இது தொடர்பில் யாருமே கரிசனை கொள்வதாகத் தெரியவில்லை. அதற்கான காரணமும் புரியவில்லை.

குறித்த வீதியின் பகுதி சேதமடைந்திருப்பதைப் பார்க்கும்போது, அரச நிர்வாகம் இங்கு செயலற்றுப் போய்விட்டதோ என்று எண்ணுமளவுக்கு நிலைமை உள்ளது.

ஆகையால் குறித்த வீதியை உடனடியாகப் புனரமைக்கின்ற பணியை நீங்கள் களத்தில் நின்று செய்தாக வேண்டும். இதுவே மக்களின் குறை தீர்க்கின்ற பணியாகும்.

# போர் வீரர்களை சிப்பாய்கள் என்று ஜனாதிபதி அநுர உரைத்தமை தவறு

## புலிப்பிரிவினைவாதி நண்பர்களுக்காய் இராணுவத்தை அவமதித்தாராம் அநுர - பிதற்றுகிறார் கம்மன்பில

விடுதலைப் புலிப் பிரதிநிதிகள் முகம் சுழித்துக் கொள்வார்கள் என்ற காரணத்துக்காக தேசிய வீரர்கள் தினத்தைப் புறக்கணிக்க நினைத்த ஜனாதிபதி தனது உரையில், யுத்தகளத்தில் போரிட்ட போர் வீரர்களை சிப்பாய்கள் என்று கூறி, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அவமதித்துள்ளதாகப் பிவிதுரு ஹெல உருமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

கட்சித் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே இதனைக் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

விடுதலைப் புலிகளின் பிரிவினைவாதிகள் முகம் சுழித்துக் கொள்வார்கள் என்ற பயத்தில் ஜனாதிபதி தேசியப் போர் வீரர் நிகழ்வில் கலந்துகொள்ளாமல் இருக்கவே தீர்மானித்திருந்தார்.

இருந்தபோதும் தேசத்தை நேசிக்கும்மக்களால் ஏற்படுத்தப்பட்ட பெரும் அழுத்தத்தின் காரணமாக விருப்பமில்லாவிட்டாலும் தேசிய போர்வீரர் நிகழ்வில் கலந்து கொள்ள நேர்ந்தது.

ஆனால், போர்வீரர்களின் முன்னிலையில் பேசும்போதும் போர்வீரர்கள் என்ற சொல்லைப் பயன்படுத்தாமலிருக்க முயற்சித்தார். போர்வீரர்களை நினைவு கூருவதற்காகவே இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஆனால், ஜனாதிபதி போர் வீரர்களை சிப்பாய் என்றே அடையாளப்படுத்தினார். ஒவ்வொரு போர் வீரரும் சிப்பாயாக இருந்தாலும் சகல சிப்பாய்களும் போர்வீரர்களாக இருக்கமாட்டார்கள். சிப்பாய் ஒருவர் போர் வீரராக வேண்டுமென்றால் அவர் யுத்த பூமியில் போரிட்டிருக்க வேண்டும்.

ஆகவே, எமது போர் வீரர்களுக்கான தேசிய போர்வீரர் நிகழ்விலேயே அவர்களை சிப்பாய்கள் என்று கூறி போர் வீரர்களை ஜனாதிபதி அவமதித்து விட்டார் என்பதே எங்களின் நம்பிக்கையாகும்.

ஜனாதிபதி போர்வீரர்கள் மத்தியில் ஆற்றிய உரையை இன்றும் யுத்தத்துக்கான ஆரம்ப விதையாக அமைந்த இனவாத, பிரிவினைவாத, பயங்கரவாத வைராக்கியத்தைத் தூண்டிக் கொண்டிருக்கும். தற்போது ஜனாதிபதியின் நண்பர்களாகியுள்ள கனேடிய தமிழ்க் காங்கிரஸ் மற்றும் உலக தமிழர் பேரவை என்பவற்றின் தலைவர்கள் உள்ளிட்ட நண்பர்களின் மத்தியிலேயே ஆற்றியிருக்க வேண்டும் என்பதை நினைவுபடுத்திக் கொள்கிறோம் என்றார். (ம-4,7)

## விழிப்புலனற்றோர் சங்க ஆண்டு விழா

யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்தின் 49 ஆவது ஆண்டு விழாவானது நாளை வெள்ளிக்கிழமை காலை 9.40 மணியளவில் யாழ்ப்பாணம் அரியாலையில் அமைந்துள்ள J விருந்தகத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத் தலைவர் சுதாகரன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில்,

முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் அவர்களும் சிறப்பு விருந்தினராகயாழ்ப்பாணம்போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சத்தியமூர்த்தியும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ம-4,7)

## யாழில் மிக விரைவில் கடவுச்சீட்டு அலுவலகம்

### பணிகள் துரித கதியில் முன்னெடுப்பு

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள கடவுச்சீட்டு அலுவலக புனரமைப்பு வேலைகள் தொடர்பான முன்னேற்ற கலந்துரையாடல் யாழ்.மாவட்ட செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது கடவுச்சீட்டு அலுவலகத்தின் புனரமைப்பு வேலைகளை விரைவாக நிறைவேற்றி முடிக்க வேண்டிய தேவைப்பாடுகளை மாவட்ட செயலர் வலியுறுத்தினார்.

இக் கூட்டத்தினைத் தொடர்ந்து, கடவுச்சீட்டு அலுவலகம் அமையவுள்ள இடத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் வேலைகளை நேரடியாக ஆய்வு செய்ததுடன் வேலைகளை விரைவுபடுத்துவது தொடர்பாகவும் பணிப்புரைகள் வழங்கப்பட்டது. (ம-4,7)

### தாயகக் காணி கையகப்படுத்தல் வர்த்தமானியின்

## தற்காலிக இடைநிறுத்தத்தால் எவருக்கும் எந்தப் பலனுமில்லை

### ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன்

வட மாகாணத்திலுள்ள காணிகள் தொடர்பில் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் உள்ள விடயங்களை நடைமுறைப் படுத்துவதைத் தற்காலிகமாக இடைநிறுத்துவது எந்தவொரு தரப்பினருக்கும் நிரந்தரத் தீர்வைப் பெற்றுத்தராது. எனவே அவ்வர்த்தமானி அறிவித்தல் முழுமையாக வாபஸ் பெறப்பட வேண்டும் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் மீள வலியுறுத்தியுள்ளார்.

குறித்த வர்த்தமானி அறிவித்தலிலுள்ள விடயங்களை நடைமுறைப் படுத்துவதை தற்காலிகமாக இடைநிறுத்துவதாக கடந்த ஞாயிற்றுக்கிழமை அரசாங்கம் அறிவித்துள்ளது.

இருப்பினும் எவரேனும் காணிகளுக்கான உரிமையை நிறுவுவதற்குத் தவறும் பட்சத்தில் அல்லது காணிகளுக்கு உரிமை கோராதவிடத்து அக்காணிகள் கட்டாயமாக அரசுடைமையாக்கப்பட வேண்டும் எனக் காணி நிர்ணய கட்டளைச் சட்டத்தின் 5 (1) ஆம் பிரிவில் வலியுறுத்தப்பட்டிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-4,7)

## அரச பேருந்து - வான் மோதி விபத்து

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணிகளுடன் பயணித்த இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்து ஒன்று கிளிநொச்சி உமையாள்புரம் பகுதியில் வானுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

யாழ் நோக்கிப் பயணித்த குறித்த பேருந்து கிளிநொச்சி உமையாள் புரப்பகுதியில் முன்னால் சென்று கொண்டிருந்த வானை முந்த முற்பட்ட வேளையே குறித்த விபத்து சம்பவித்துள்ளது.

இவ்விபத்தில் தெய்வாதீனமாகப் பேருந்தில் பயணித்த பயணிகளுக்கும் வானில் பயணித்தவர்களுக்கும் எதுவித பாதிப்பும் ஏற்படவில்லை.

எனினும் இரு வாகனங்களும் பகுதியளவில் சேதமடைந்தன.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-4,7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருப்பெயர்ச்சிப் பலன்கள்

## 11.05.2025 முதல் 26.05.2026 வரை

65/100



**கும்ப இராசி நேயர்களே!**

இதுவரை உங்கள் இராசிக்கு 4 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த குருபகவான் 11.5.2025 அன்று 5 ஆம் இடத்திற்குப் பெயர்ச்சி யாகிறார்.

பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குருவின் பார்வை உங்கள் இராசியிலேயே பதியப் போவதால் இக்காலம் ஒரு பொற் காலமாக மாறும். எடுத்த செயல்கள் அனைத்திலும் வெற்றி கிடைக்கும். இல்லத்தில் சுபகாரியங்கள் கைகூடும்.

புனிதமடைகின்றன. பொதுவாக “இராசியைக் குரு பார்த்தாலே, யோசிக்காது செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும்” என்பார்கள். அந்த அடிப்படையில், இக் காலம் ஒரு இனிய காலமாகவே மாறுகின்றது. எதில் ஈடுபட்டாலும் அதில் வெற்றி கிடைக்கும். உள்ளத்தில் உள்ளவர்களின் எண்ணங்களைப் பூர்த்தி செய்வீர்கள். வாழ்க்கைத் தேவைகள் படிப்படியாக பூர்த்தியாகும். ஆலயத் திருப்பணிக்கு கொடுத்து உதவுவீர்கள்.

குருவின் பார்வை 9 ஆம் இடத்தில் பதிவதால் பொன், பொருள் வாங்கும் யோகம் உண்டு.

பொருளாதாரத்தில் உச்ச நிலையை அடைவீர்கள். பூர்வீகச் சொத்துப் பிரச்சினை நல்ல முடிவிற்கு வரும். உத்தியோகத்தில் உங்களுக்கு தொல்லை கொடுத்து வந்த மேலதிகாரிகள் மாற்றப்படுவர். வேகத்தோடும், விவேகத்

கூடும். 10.6. 2025 முதல் 7.8.2025 வரை திருவாதிரை நட்சத்திரக் காலில் ராகு சாரத்தில் குருபகவான் சஞ்சரிக்கும் பொழுது கொஞ்சம் கவனமாகச் செயற்பட வேண்டும். மனம் ஒருநிலைப்படாமல் தத்தளிக்கலாம். இதைச்




செய்வோமா, அதைச் செய்வோமா என்ற இரட்டித்த சிந்தனை அதிகரிக்கும். குடும்ப விடயத்தை மூன்றாம் நபரிடம் சொல்ல வேண்டாம். உத்தியோகத்தில் உங்கள் திறமைக்குரிய அங்கீகாரம் கிடைக்காது. எந்த முடிவையும் அனுபவஸ்தர்களுடன் கலந்து ஆலோ

எந்தக் காரியத்தையும் செய்யும் முன்னால் ஒருகணம் யோசித்துச் செய்வது நல்லது. 6 ஆம் இடத்தில் குரு உச்சம் பெற்றுச் சஞ்சரிப்பதால் ஆரோக்கியச் சீர்கேடுகள் ஏற்படும். உடல்நலம் சீராக வேண்டுமானால் ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்த வேண்டும். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்திணைவர். இக்காலத்தில் முறையாக குல தெய்வ வழிபாட்டையும், குரு வழிபாட்டையும் மேற்கொள்வது நல்லது.

**சனிப்பெயர்ச்சி**

6.3.2026 அன்று சனிபகவான் கும்ப இராசியில் இருந்து மீன இராசிக்குப் பெயர்ச்சியாகிச் செல்கிறார். உங்கள் இராசியில் இருந்து சனி விலகுவது யோகம் தான். ஜென்மச் சனி குடும்பச் சனியாக மாறுகின்றது. இது வாக்கிய கணித ரீதியான சனிப்

# ஐந்தில் வந்தது குருபகவான் அதிர்ஷ்ட வாய்ப்புகள் தேடிவரும்

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

**குரு இருக்கும் இடத்தின் பலன்**

உங்கள் இராசிக்கு 2, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர், குரு. அவர் பூர்வ புண்ணிய ஸ்தானத்திற்கு வரும் இந்த நேரம், பூர்வ புண்ணியத்தின் பலனாக நினைத்தது கிடைக்க வழி பிறக்கும். பிள்ளைகளால் பெருமை சேரும். பிரபலஸ்தர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து பல நல்ல காரியங்களை முடித்துக் கொடுப்பர். தனவரவு தாராளமாக வந்து சேரும். உடலில் ஏற்பட்ட நோய்கள் இனி சூரியனை கண்ட பனிபோல் ஓடி ஒளியும். கவலை என்ற மூன்றெழுத்து உங்களை விட்டு விலகும். கனிவு என்ற மூன்றெழுத்து உங்களோடு வந்திணையும். இக்காலத்தில் திசைமாறிய தென்முகக் கடவுளை அனுகூல நாளில் வழிபட்டால் அனைத்து முயற்சிகளிலும் வெற்றி கிடைக்கும்.

**குருவின் பார்வை பலன்**

இந்த குருப்பெயர்ச்சியின் விளைவாக குரு பகவானுடைய பார்வை உங்கள் இராசிக்கு 1,9,11 ஆகிய இடங்களில் பதிகிறது. எனவே அந்த இடங்கள் எல்லாம்

தோடும் செயற்படுவீர்கள்.

குருவின் பார்வை 11 ஆம் இடத்தில் பதிவதால் இலாபம் எதிர்பார்த்ததைக் காட்டிலும் கூடுதலாகக் கிடைக்கும். தொழில் வளர்ச்சி அதிகரிக்கும். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்திணைவர். இளைய சகோதரத்தோடு இருந்த கருத்து வேறுபாடுகள் அகலும். கௌரவம்,அந்தஸ்து உயரும். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டுவீர்கள். ஊதிய உயர்வு கிடைத்து மகிழ்ச்சி கூடும்.

**நட்சத்திரப் பாதசாரப்படி பலன்கள்**

11.5.2025 முதல் 9.6.2025 வரை மிருகசீரிடம் நட்சத்திரக் காலில் செவ்வாய் சாரத்தில் குரு பகவான் சஞ்சரிக்கும் பொழுது, உடன்பிறப்புக்கள் உங்களுக்கு உறுதுணையாக இருப்பர். வெற்றிச் செய்திகள் வீடு வந்து சேரும். தொழில் முன்னேற்றப் பாதையை நோக்கிச் செல்லும்.

சுய ஜாதகத்தில் திசாபுத்தி பலம் பெற்றிருந்தால் நடக்கும் தொழிலை விரிவு செய்து இலாபம் குவிப்பீர்கள். ஆலயத் திருப்பணிகளில் ஆர்வம்

சித்து எடுப்பது நல்லது.

8.8.2025 முதல் 25.5. 2026 வரை புனர்பூசம் நட்சத்திரக் காலில் தன் சுயசாரத்தில் குருபகவான் சஞ்சரிக்கும் பொழுது பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். புது முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். வருமானம் உயரும். வாரிசுகளின் முன்னேற்றம், கண்டு மகிழ்ச்சி அடைவீர்கள்.

**குருவின் அதிசாரப் பெயர்ச்சி**

8.10.2025 அன்று குருபகவான் கடக இராசிக்குப் பெயர்ச்சியாகிச் செல்கிறார். அங்கிருந்து கொண்டு உங்கள் இராசிக்கு 2, 10, 12 ஆகிய இடங்களைப் பார்க்கிறார். உச்சம் பெற்ற குருவின் பார்வை அந்த இடங்களில் பதிவதால் புதிய திருப்பங்கள் ஏற்படும். மனக் குழப்பம் அகலும். மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர். அரசியல் களத்தில் உள்ளவர்களுக்கு எதிர்பார்த்த பொறுப்புகள் கிடைக்கும். தொழிலில் இலாபம் வந்தாலும் அதைக் காட்டிலும் கூடுதல் விரயங்கள் ஏற்படும்.

பெயர்ச்சியாகும். இனி உடல் உபாதைகள் குறையும். உள்ளத்தில் நினைத்ததை உடனடியாகச் செய்து முடிக்க இயலும், தெளிந்த மனநிலையோடு செயற்படுவீர்கள். வியாபாரப் போட்டிகள் அகலும், உத்தியோகத்தில் பணிநீக்கம் செய்யப்பட்டவர்கள் மீண்டும் பணியில் சேர வாய்ப்புக் கிடைக்கும். இக்காலத்தில் சனிக் குரிய சிறப்பு தலங்களுக்குச் சென்று சனிகவசம் பாடி வழிபட்டு வருவது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

இந்த குருப்பெயர்ச்சியின் விளைவாக நல்ல மாற்றங்கள் வந்துசேரும். வருமானம் திருப்தி தரும். வளர்ச்சி கூடும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்வது நல்லது. பணிபுரியும் பெண்களுக்கு கேட்ட சலுகைகள் கிடைக்கும். என்றாலும் குருவின் வக்ர காலத்தில் மிகவும் கவனத்தோடு செயற்பட வேண்டும். எதிர்பாராத இடமாற்றங்கள் மன வருத்தத்தை உருவாக்கும். சனிப் பெயர்ச்சிக்கு பிறகு இல்லத்தில் சுபநிகழ்ச்சிகள் நடைபெறும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முல்லைத்தீவில்...

மாதீஸ்வரன் நர்மதா என்ற மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வீதியில் மிக வேகமாக வந்த மீன் ஏற்றும் வாகனம் சிறுமி மீது மோதியுள்ளதுடன் 20 தொடக்கம் 30 அடி வரையான தூரத்திற்கு வாகனத்தால் இழுத்துச் செல்லப்பட்ட பின்னர் வாகனம் நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பாடசாலைக்கு மாணவர்கள் செல்கின்ற காலை வேளையில் இந்தச் சம்பவம் பாடசாலைக்கு அண்மையில் இடம்பெற்றுள்ளது. இருப்பினும் இந்தப் பகுதியில் வீதிப் போக்குவரத்துப் பொலிஸார் எவரும் குறித்த நேரத்தில் கடமையில் ஈடுபட்டு இருக்கவில்லை எனக் குற்றச் சாட்டப்பட்டது. (ம-7,4,299)

## அசைவ உணவக...

யாழ்ப்பாணம் - நல்லூர் கந்த சுவாமி கோயில் அருகே திறக்கப்பட்டுள்ள அசைவ உணவகத்தை மூட வலியுறுத்தி ஆலய பக்தர்களிடம் சேகரிக்கப்பட்ட கையெழுத்துக்களடங்கிய மகஜர் யாழ்.மாநகர சபை ஆணையாளரிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டது.

ஆலய பக்தர் ஒருவரின் தன்னார்வ முயற்சியால் ஆரம்பிக்கப்பட்ட கையெழுத்து சேகரிப்பு நடவடிக்கையில் 450ற்கும் மேற்பட்டவர்கள் தமது கையொப்பங்களைப் பதிவு செய்தனர்.

குறித்த கையொப்பங்கள் அடங்கிய மகஜர் யாழ்.மாநகர சபை அலுவலகத்தில் வைத்து மாநகர சபை ஆணையாளர் கிருஷ்ணேந்திரனிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டது.

இதன்போது சிவகுரு ஆதீனத்தின் தவத்திரு வேலன் சுவாமிகள் உள்ளிட்ட சைவ சமய ஆர்வலர்கள் பங்கேற்றனர்.

குறித்த மகஜரின் பிரதிகள் வடக்கு மாகாண ஆளுநர், யாழ்ப்பாண மாவட்ட செயலாளர், நல்லூர் பிரதேச செயலாளர், இந்து கலாசார திணைக்களப் பணிப்பாளர் ஆகியோருக்கும் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-7,4,33,104)

## இனப் படு...

விப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், கனேடியத் தூதுவர் எரிக் வோல்ஸிடம் நேரில் தெரிவித்ததோடு கடிதம் ஒன்றையும் கையளித்துள்ளார்.

மேற்குறித்த நினைவுத் தூபி அமைப்புக்கு நன்றி தெரிவித்து கனேடியப் பிரதமர் மார்க் ஹானி , பிரம்டன் நகர மேஜர் பற்றிக் பிரவுண் கடந்த 19ஆம் திகதி மின்னஞ்சலில் அனுப்பிவைக்கப்பட்ட கடிதங்களின் பிரதியே நேற்று கனேடியத் தூதுவரிடம் சிறீதரன் எம்.பியால் நேரில் கையளிக்கப்பட்டுள்ளது.

குறித்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கைத் தீவின் அளவில் சிறிய தேசிய இனமாக அடையாளப்படுத்தப்படும் தமிழ்த்தேசிய இனம் மீது, இலங்கை அரசால் வலிந்து மேற்கொள்ளப்பட்ட மனிதப் பேரவலத்தை "இனப்படுகொலை" என்று ஏற்றுக்கொண்ட முதலாவது நாடான கனடாவின் பிரம்டன் நகரில், தமிழினப் படுகொலை நினைவுத் தூபி நிறுவப்பட்டு வலிசுமந்த மாதமான மே மாதத்தில் திறந்துவைக்கப்பட்டுள்ளமை பாதிக்கப்பட்ட எமது மக்களின் மனக்காயங்களுக்கு மருந்தாய் அமைந்துள்ளதை நன்றியோடு பதிவு செய்கிறேன்.

ஈழத்தமிழர்கள் மீது நிகழ்த்தப்பட்ட போரின் அறமீறல்கள் குறித்தும் போர் முடிவுற்றதன் பின்னரான கடந்த 15 ஆண்டுகளில் எமது மக்களின் பாரம்பரிய வாழ்விடங்கள் மீதும், கூட்டுப் பண்பாடுகள் மீதும் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற கட்டமைக்கப்பட்ட இன அழிப்புச் செயற்பாடுகள் தொடர்பிலும் கரிசனையோடிருக்கும் கனேடிய அரசினால், ஈழத் தமிழினம் சார்ந்து சமகாலத்தில் முன்னகர்த்தப்படும் காத்திரமான செயல்களும், அறிவிப்புகளும் சர்வதேச அரங்கிலும், தமிழ் மக்கள் மனங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதை உணரமுடிகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,4)

## யாழில்...

யாழ்ப்பாணத்தில் சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்ய வேண்டும் என உலக வங்கிக் குழுவினரிடம் யாழ்.மாவட்டச் செயலாளர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ள உலக வங்கிக் குழுவினருக்கும் யாழ்.மாவட்டச் செயலாளருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று யாழ். மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

இக் கலந்துரையாடலில் மாவட்டச் செயலாளரினால் பிரதானமாக பின்வரும் விடயங்கள் முன்வைக்கப்பட்டன.

1. விவசாயம், மீன்பிடி மற்றும் கைத்தொழில் போன்ற துறைகளின் தற்போதைய நிலைவரங்களும், வாழ்வாதாரத் துறைகளுக்கான தேவைப்பாடுகளும் உள்ளூர் உற்பத்திகளுக்கான ஏற்றுமதி சந்தை வாய்ப்புக்கள் தொடர்பாகவும் விளக்கமளித்தார்.

2. யாழ்ப்பாண மாவட்டத்திற்கான சுற்றுலாத்துறை அபிவிருத்தி தொடர்பில் விசேடமாக யாழ்ப்பாண கோட்டை மற்றும் பழைய கச்சேரியினை புனரமைத்து மரபுரிமை சுற்றுலா அபிவிருத்தியினை மேம்படுத்துவதற்கான அவசியத்தினையும் எடுத்துக் கூறினார்.

3. பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கான நிலையான வாழ்வாதார அபிவிருத்தி தொடர்பான கோரிக்கைகளும் அரசாங்க அதிபரால் முன்வைக்கப்பட்டது.

4. தெல்லிப்பளை காங்கேசன் துறையில் 351 ஏக்கரில் கைத்தொழில் வலயமாக பிரேரிக்கப்பட்ட பகுதியில் எதிர்கால முதலீடு மற்றும் அச்சுவேலி கைத்தொழில் பேட்டையின் அபிவிருத்தி தொடர்பாகவும், அதற்கான தொழில் வாய்ப்புக்களுக்கான தேவைப்பாடுகள் தொடர்பாகவும் விளக்கப்பட்டன.

5. தனியார் துறைகளின் அபிவிருத்தி மூலம் இளைஞர் யுவதிகளுக்கான வேலை வாய்ப்புக்களை வழங்க முடியும் எனவும், அதற்கான தனியார் துறைகளின் முதலீடுகளுக்கான தேவைப்பாடுகள் மற்றும் வசதி வாய்ப்புகள் தொடர்பாகவும் அரசாங்க அதிபரால் விளக்கமளிக்கப்பட்டது.

6. பலாலி சர்வதேச விமான நிலையத்தினை சர்வதேச தரத்திற்கு உயர்த்த வேண்டிய தேவைப்பாடுகள் மற்றும் காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தியின் அவசியம் தொடர்பாகவும் விளக்கமளிக்கப்பட்டது.

இக் கலந்துரையாடலினைத் தொடர்ந்து மாவட்டச் செயலாளரின் கோரிக்கைக்கு அமைவாக பழைய கச்சேரியினை குழுவினர் பார்வையிட்டனர். இக்கலந்துரையாடலில் உலக வங்கி குழுவின் வதிவிடப் பிரதிநிதி விக்டர் அந்தோணிப்பிள்ளை, மாலைதீவு மற்றும் இலங்கைக்கான வதிவிட முகாமைத்துவ பிரிவின் சிரேஷ்ட செயற்பாட்டு அலுவலர் ஸ்ரீபன் மசீங், சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டு அலுவலர் ருக்சினா குணரட்ன மற்றும் இணைந்த செயற்பாட்டு அலுவலர் மொகமட் கவீஸ் சைநூடீன் ஆகியோர் பங்குபற்றினார்கள். (ம-7,4,33,104)


மஹஜன சம்பத
திகதி 2025.05.21
சீட்டிழுப்பு இலக்கம் 5836
W 1 2 1 0 7 8
அத சம்பத
W 1 0 7 8
சீட்டிழுப்பு இலக்கம் 0411
தேசிய லொத்தர் சபை National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.05.21
சீட்டிழுப்பு இலக்கம் - 1866
B 06 08 19 34 B
Double Chance 74149

மெகா பவர்
திகதி 21/05/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2184
H 14 07 34 43 59

ஜய
திகதி 2025.05.21
சீட்டிழுப்பு இலக்கம் 104
M 3 3 3 4

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4078
சீட்டிழுப்பு திகதி | 21.05.2025
N 17 38 40 67
N
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.05.21
சீட்டிழுப்பு இலக்கம் 1145
துலாம் 11 54 55 61 துலாம்
09400 10

உத்தியோகபூர்வ முடிவுகள்
21.05.2025 வெற்றி வாரம் 544
C 7 9 8 0 4 2
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.37,640,226.40
52373
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2810
சீட்டிழுப்பு திகதி 2025.05.21 தினம் புதன்கிழமை
18 26 76 80 Z
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 63,185,664.00

சனிதா
திகதி 21.05.2025 வெற்றி வாரம் 4971
03 15 22 33 L
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 64,399,419.20
94156

ஜயோதா Jayoda
திகதி 2025.05.21 வெற்றி வாரம் 2128
16 48 51 52 M
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 29,450,155.60

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4522
சீட்டிழுப்பு திகதி 21.05.2025 தினம் புதன்கிழமை
25 27 53 61 மேடம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,183,964.80
177352

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
G 06 03 15 36 47
1986
21.05.2025 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட்

அட கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
வெற்றி வாரம்: 2636
சீட்டிழுப்பு திகதி : 2025.05.21
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.56,117,301.60
23 32 48 51 R
134464


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
05 - 10 - 1936



மறைவு
20 - 05 - 2025

## சிதம்பரப்பிள்ளை தெய்வானை (செல்லம்)

வதிரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை தெய்வானை (செல்லம்) அவர்கள் கடந்த (20.05.2025) செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - நாகமுத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கதிர்காமு - பத்தினி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கதிர்காமு சிதம்பரப்பிள்ளை (கரவையதார்த்தன்) அவர்களின் ஆருயிர் மனைவியும் சுமதி, நந்தினி, ஜீவதயாபரன், சாந்தி, பாமினி, வசந்தி (சிட்டு), சுகந்தினி (கவிதா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் வியாகேசு (Beacon study center), கணேசன், மதிவதனி, கணபதிப்பிள்ளை (சிவா), சித்ராஞ்சன், சுகந்தன், செந்தூர்நாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும் சபிதா, சனோஜன், பிரணவன், ஹரேஸ், சஜானி, அவினாஷ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான வள்ளியம்மை, அன்னப்பிள்ளை, குஞ்சியார் (ராசம்), முருகேசு, திருநாவுக்கரசு (செல்லையா), செந்தியா (இரத்தினம்), கிருஷ்ணன் (முத்து) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவக்கொழுந்து, காலஞ்சென்றவர்களான கந்தையா, பொன்னையா, கந்தசாமி, லட்சுமி, சிவகாமி, செல்வநாயகி, சீதேவி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (23.05.2025) வெள்ளிக்கிழமை மு.ப 10.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வதிரி,
கரவெட்டி.

தகவல் : குடும்பத்தினர்
021 226 4469

(4344)

## வடக்கு...

கரையோர பகுதிகளிலுள்ள காணிகளை சுவீகரிப்பது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை அரசாங்கம் உடன் மீளப்பெற வேண்டும் என வலியுறுத்தி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் நேற்று முன்தினம் சபை ஒத்திவைப்புவேளை பிரேரணையை முன்வைத்தார்.

மேற்படி வர்த்தமானி அறிவித்தல் மீளப்பெறப்பட வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

இவ்விவாதத்தில் உரையாற்றிய போதே அமைச்சர் பிமல் ரத்நாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், வடக்கு மக்களுக்குரிய காணிகளை சுவீகரிப்பதற்குரிய எந்தவொரு தேவைப்பாடும் அரசாங்கத்துக்கு கிடையாது.

வடக்கில் எமக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். வடக்கு மக்களும் எமது பக்கம் உள்ளனர். எனவே, அங்குள்ள மக்களின் காணியை பறித்து வேறு நபர்களுக்கு வழங்கவேண்டிய தேவைப்பாடு எமக்கு கிடையாது. வேறு நபர்களை குடியேற்ற வேண்டிய தேவைப்பாடும் எமக்கு கிடையாது.

அத்துடன், ராஜபக்ஷக்கள், ரணிலைப் பார்த்தது போல எம்மையும் சந்தேக பார்வையுடன் பார்க்க வேண்டாம். தேர்தல் காலங்களில் வேண்டுமானால் அரசியல் நடத்துங்கள் என்றார்.

(ம-4,7)


சிகை அலங்கரிப்பு நிலையத்திற்கு வேலையாட்கள் தேவை

யாழ். நகரப் பகுதியில் இயங்கிவரும் சிகை அலங்கரிப்பு நிலையத்திற்கு வேலையாட்கள் தேவை.

077 985 8327
077 979 9855

(4352)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-3018)

076 825 7716 (ஆகாஸ்)

உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS

எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம்
• சாவகச்சேரி • மானிப்பாய்
• நெல்லியடி • பருத்தித்துறை
• திருகோணமலை • வல்வெட்டித்துறை
• கோப்பாய் • புத்தூர்
• பண்டத்தரிப்பு • சங்கானை
• கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com
(C-3019)

கனடா - வரி இல்லாமல்
விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3970/-
11-16 Kg 2800/-
21-30 Kg 2640/-


குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery

UK 11Kg - 1420/- France 11Kg - 2220/- Germany 11Kg - 2020/-
Swiss 11Kg - 2510/- Australia 11Kg - 1980/- Italy 11Kg - 2250/-

எமது நேரடி கிளைகள்
கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 076 822 6237
(C-3019)


# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் கணேசு நடராசா

(உரிமையாளர் - நெல்லியடி ஹப்பி ரெக்ஸ்ரைல்)

மண்ணில்
1962.03.26

விண்ணில்
2022.04.25



மூன்றாண்டாகியதோ எம் ஒளிவிளக்கே
உமை இழந்து இன்று
ஈரவிழி காயவில்லை
இதயத்தால் நொந்து வாடுகின்றோம்
நித்தம் நித்தம் கனவுதனில்
நீங்கள் வந்து போவதனால்
சிறிது நெஞ்சாறி வாழுகின்றோம்
வேராக இருந்து எம்மை
விருட்சங்களாக்கிய உங்கள்
நேரான பண்புகளை நெஞ்சில் சுமந்தபடி
நீர்காட்டிய வழியில் நடக்கிறோம்
தீராது என்றும் உம் நினைவுகள்...
என்றும் உம் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



நெல்லியடி

சகோதரர்கள்
077 832 9458, 078 123 4666

(C-3017)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல. 191, [illegible] யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.05.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org